


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


ஒக்டோபர் – 2013

மலர் - 45 இதழ் - 08

• **ஆசிரியர்**
லெஸ்லி ஜெயகாந்தன்

• **இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

• **துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

• **ஆலோசகர்**
A.G.இராஜேந்திரம்

• **கணினி வடிவமைப்பு**
சுபாஜெனி சங்கர்

• **வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

• **முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

• **பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


## உள்ளே




அன்புடன் உங்களோடு ................ 01
நம்பிக்கை வாழ்வைக் ................ 02
செல்மின்சாரம் ................ 04
இலண்டனில் நடைபெற்ற ................ 04
தமிழ்த்தூது ................ 05
மாணவர் பக்கம் ................ 07
நெஞ்சு வலிக்குது ................ 08
வாகரையில் புதிய ................ 10
கவிதைகள் ................ 11
அழுத்தங்கள் நமக்கு ................ 12
கடுகுக்கதை ................ 15
தொண்டனின் சில ................ 16
துன்பப்படும் தமிழ் ................ 18
விசைகொண்டெழுக ................ 19
இலக்கிய மஞ்சரி ................ 20
தனிநாயகம் அடிகளாரின் ................ 21
இறையியலின் புதுப் புனலாய் ................ 23
மதங்கள் காலப்போக்கில் ................ 24
விவிலியம் கற்போம் ................ 27
அறிவை வளர்ப்போம் ................ 28


**ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)**


**SOCIAL COMMUNICATIONS CENTRE**
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : *40/=*
ஆண்டு சந்தா : *450/=*
(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அன்புடன் உங்களோடு....!

உண்மை என்றும் உறங்குவதில்லை, உண்மையா....? அது என்ன? என்ற உண்மையைப் பற்றிய தத்துவக் கோட்பாடுகளை நாம் கேட்டிருக்கின்றோம். அதைப் பற்றிய வியாக்கியானங்களையும் நாம் தொகுத்துமிருக்கின்றோம். "நானே உண்மை" (யோவான் 14:06). "உண்மைக்கு சான்று பகரவே நான் இந்த உலகிற்கு வந்துள்ளேன்" (யோவான் 18:37). ஆண்டவர் இயேசு, அவரே உண்மையென்று வலியுறுத்திக் கூறி அவ்வுண்மையை எடுத்துரைக்கவும் அதற்குச் சான்று பகரவுமே இவ்வுலகிற்கு வந்தார். எந்தவொரு மனிதனும் தன்னை உண்மையானவன் என்றோ அல்லது தன்னைப் பொய்யன் என்றோ அறிக்கையிட முடியாது. ஏனெனில் மாந்தர் அனைவரும் உண்மையும் பொய்மையும் இரண்டறக் கலந்தவர்கள். கடவுள் உண்மையானவர், அவர் மட்டுமே உண்மை. "அவ்வுண்மையிலிருந்து பொய் வெளிவராது, சாத்தான்தான் பொய்யன். அவன் பொய்மையின் பிறப்பிடம். ஆண்டவர் இயேசு கடவுளின் வார்த்தை. எனவே, அவ்வார்த்தையே உண்மை.

மனிதர்களிடம் உண்மையும் பொய்மையும் இரண்டறக் கலந்து இரண்டுமே ஒரே நேரத்தில் அவர்களது சொல்லிலும் செயலிலும் வினையாற்றிக்கொண்டு இருக்கின்றன. மனிதன் நன்மை செய்ய முயற்சிக்கும்போது தீமை தானாகவே இடையில் புகுந்துவிடுகின்றது. உண்மையைப் பேச வேண்டுமென்று முயற்சிக்கும்போது பேச்சில் பொய்மை கலந்துவிடுகின்றது. இதற்கு எந்த மனிதனும் விதிவிலக்கல்ல.

ஆம், உண்மை என்றும் உறங்குவதில்லை. பல ஆண்டுகளாக மூடி மறைக்கப்பட்ட உண்மைகள் இப்போது மூலை முடுக்கெல்லாம் சல்லடை போட்டு கிண்டிக் கிளறியெடுக்கப்படுகின்றன.

எமது நாட்டில் யுத்தத்தினால் அநியாயமாகக் கொல்லப்பட்ட மனித மனங்களின் அலறல்கள் மனித உரிமை மீறல்களின் எதிரொலியாக ஒலிக்கின்றன. இவர்களின் மரண ஓலங்களுக்குப் பொறுப்பானவர்கள் யார்....? இவர்கள் நம் நாட்டிலே இருக்கும் அரசியல்வாதிகளே; பசுத்தோல் போர்த்திய புலிகளாக இவர்கள் இன்றும் வலம்வந்துகொண்டே இருக்கின்றார்கள்.

முழுப்பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கப் பார்க்கின்றார்கள். உண்மையைச் சாகடிக்கப் பார்க்கிறார்கள். தப்பிக்க நினைக்கும் இவர்களை மனித உரிமைகளுக்கான நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். பாதகம் செய்த இவர்கள் அனைவருக்கும் பட்டையைக் கிளப்ப வேண்டும். பாரதியார் அழகாகச் சொல்கிறார்:

"பாதகம் செய்வோரைக் கண்டால்
பயம் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா" என்று.

எனவே, உண்மையின் வழி நடப்பவன்தான் உத்தமன். எனவே, உண்மையை கற்று, நல்லதே செய்வோம். பிறருக்கும் நாட்டுக்கும் உண்மையுள்ளவர்களாக வாழ்வோம்.

■ ஆசிரியர் -

**இறைவார்த்தை**

**"உண்மையைச் சார்ந்த அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கிறார்கள்"**

**- (யோவான் 18:37) -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தேசிய மறைக்கல்வி தினம் - 2013 செப்டம்பர் 29

# நம்பிக்கை வாழ்வைக் கட்டியெழுப்புவதன் மூலம் மறை வாழ்வைக் கட்டியெழுப்புவோம்



**சர்வதேச மறைக்கல்வி தினச் செய்தி**

புனித பவுல் கொலோசே நகர் திருச்சபைக்கு எழுதுகையில், "நீங்கள் முழு ஞானத்தையும் பெற்று கடவுளின் திருவுளத்தைப் பற்றிய அறிவை நிறைவாக அடையவேண்டும். நீங்கள் பயன்தரும் நற்செயல்கள் அனைத்தும் செய்து, கடவுளைப் பற்றிய அறிவில் வளர வேண்டும்" (கொலோ 1:9-10) என அவர்களின் நம்பிக்கை அறிவு வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அக்கறையைக் காண்கிறோம். நாம் ஒவ்வொருவரும் திருமுழுக்கின்போது பெற்றுக் கொண்ட நம்பிக்கை வாழ்வைக் கட்டியெழுப்புவதாயின் நம்பிக்கை ஆழப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்பட வேண்டும் என இந்த ஆண்டினை நம்பிக்கை ஆண்டாகப் பிரகடனப்படுத்திய திருத்தந்தை 16ம் பெனடிக்ட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தம்மையே வெளிப்படுத்தும் கடவுளின் முன்முயற்சிக்கு மனிதர் அளிக்கும் தனிப்பட்ட பதில் நம்பிக்கையாகும். நம்பிக்கை மனிதருக்கு இறைவன் தந்த இலவசக் கொடை. நம்பிக்கை கடவுளின் அழைப்புக்கு மனிதர் கொடுக்கும் முதல் பதில் மொழியாகும். திருமுழுக்கின்போது எமது பெற்றோரும், ஞானப்பெற்றோரும் எமக்காக நம்பிக்கையை அறிக்கை செய்தனர். இயேசுக் கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்று அவருக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்வதே நம்பிக்கை வாழ்வாகும். அதாவது, கிறிஸ்துவோடு தொடர்ந்து உடன் நடப்பதையும் பிறரோடு ஒன்றிணைந்து உறவாடி வாழ்வதையும் நம்பிக்கை வாழ்வு அடிப்படையாகக் கொண்டுள்ளது.

எங்கும் எல்லார்க்கும் மறைக்கல்வி அளிக்கப்படவேண்டும் என்று சர்வதேச மறைக்கல்வி தினத்திலே திருச்சபை அறைகூவல் விடுக்கின்றது. கிறிஸ்தவர்கள் எல்லாரும், தங்கள் மறை பற்றிய தெளிவைப் பெற்றிருக்கிறார்களா என்பது கேள்விக் குறி. அதேசமயத்தில் சவால்கள் மிகுந்ததும் சரியாகப் புரிந்துகொள்வதில் சிரமம் உள்ளதுமான மறைக்கல்விப் பணி சிறப்பாக ஆற்றப்படுகின்றதா என்பதும் எம்முன் எழுந்திருக்கும் முக்கிய வினாவாகும். நம்பிக்கை விதைகள் ஒழுங்காக விதைக்கப்பட்டிருக்கின்றதா? ஒவ்வொரு பருவத்திற்கும் (மழலையர், சிறார்கள், இளையோர், வளர்ந்தோர், முதியோர்) ஏற்ற விதத்தில் நம்பிக்கை வாழ்வு கட்டியெழுப்பப்படுகின்றதா? என்பதையும் அவதானிக்க வேண்டும். அதாவது, வரப்பும் நீரும் உயர்ந்தால்தான் நெல் உயர வாய்ப்புண்டு. அதேபோன்று நம்பிக்கை வாழ்வு தொடக்க நிலையிலிருந்து, அடிமட்டத்திலிருந்து ஆழமாகப் போடப்பட வேண்டும். அப்போதுதான் அது உறுதியாகக் கட்டியெழுப்பப்படும்.

உலக வாழ்விலும் குழந்தைகளின் நம்பிக்கையை வளர்ப்பது மறைக்கல்வி. இறையாட்சியே கிறிஸ்தவத்தின் இலக்காக உள்ளபோது, நமது மறைக்கல்விப்பணி இதனை வாழ்ந்து காட்ட வழிகாட்ட வேண்டும். நம்பிக்கையின் வழியாக ஒவ்வொருவரும் சுதந்திரத்துடன் இறைவனுக்குத் தம்மையே அர்ப்பணிக்க முன்வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேண்டும். பிறப்பிலிருந்து இறப்பு வரையுள்ள பல்வேறு 'நம்பிக்கை வாழ்வின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப' சாட்சியாக வாழ அழைக்கப்படுகின்றோம்.

மீட்பளிக்கும் இறைவார்த்தை நம்பிக்கை யாளர்களின் உள்ளங்களில் நம்பிக்கையை ஊட்டு கின்றது. இந்த நம்பிக்கையால்தான் கிறிஸ்தவ சமூகம் தொடங்குகிறது, வளர்கிறது (கதிம. எண் 1102). திருச்சபையின் நம்பிக்கையில்தான் நம்பிக்கை யாளர்கள் தங்கள் நம்பிக்கையில் வளர்கிறார்கள். திருமுழுக்கிற்கான நம்பிக்கை வளர்ந்து, முழுமை பெற வேண்டும் (கதிம.எண் 1253). நம்பிக்கையா லும் திருமுழுக்காலும் இயேசுவைச் சார்ந்த அனைவரும் தங்கள் நம்பிக்கையை மனிதர் முன் அறிக்கையிட வேண்டும் (கதிம. எண் 14).

"எனவே இனி வாழ்பவன் நான் அல்ல: கிறிஸ்துவே என்னுள் வாழ்கின்றார்" (கலா 2:20) என உறுதியுடனும், நம்பிக்கையுடனும் சான்று பகரும் பவுலைப் போன்று, சான்று பகர்வதால் மறைவாழ்வைக் கட்டியெழுப்ப முடியும். மறைக் கல்வி ஆசிரியர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு நம்பிக்கையாளரும் மற்றவரில் கிறிஸ்து உருவாகும் வரை பவுலைப்போன்று "உங்களுக்காக நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்" (கலா 4:19) என கடினமாக உழைக்க வேண்டும். இந்தப் பூமியில், வந்து போவோர் எல்லோரும் இயேசுவில் நம்பிக்கை கொண்டு அவரின் இறப்பிலும் உயிர்ப்பி லும் பங்குபெறும்போது மட்டுமே அவரின் வரலாற் றோடும் இணைந்து பலருக்கும் வழிகாட்டும் புனிதர்கள் ஆகிறார்கள்.

நாமும் புனித வாழ்வு வாழ வேண்டு மாயின் கிறிஸ்துவின் இறப்பிலும் உயிர்ப்பிலும் தொடர்ந்து பங்குகொள்ள வேண்டும். ஆயிரமாயிரம் துன்பங்களும் இடர்ப்பாடுகளும் நம்மை நெருக்கி, நமது கனவுகளைச் சிதறடித்து, அவநம்பிக்கை உலகில் எம்மை ஆழ்த்தும்போது, இயேசுவின் உயிர்ப்பு அனுபவந்தான் எமது மறைவாழ்வைக் கட்டியெழுப்ப முடியும்.

இயேசுவின் இன்றைய சீடர்கள் நாம் அவரை இறந்தவர்களிடையே தேடாமல், வாழ்வோரி டையேயும், வாழத் துடிப்போரிடையேயும், வாழ்வு இழந்தோரிடையேயும் தேடவேண்டும், காண வேண்டும். கலிலேயாவில் அவர் ஆற்றிய இறையாட்சிப் பணியை நம் காலத்தில் நலிந்தோருக்கு நல்வாழ்வு தருவதுமாகிய பணிகள், உயிர்த்த இயேசுவின் பணிகளே! அவர் விரும்பிய புதிய வானகமும், புதிய பூமியும் உருவாக்கும் இறையாட் சிப் பணிகளில் உயிர்த்த ஆண்டவரே உடனிருக்கி றார்; வழிநடத்துகிறார். உயிர்த்த இயேசுவில் சீடர்கள் கொண்ட அனுபவத்தால் ஆழப்பட்ட நம்பிக்கையே உறுதியுடன் இயேசுவைப்பற்றிச் சான்று பகர துணிவு தந்தது. எனவே, நம்பிக்கையினால் மறைவாழ்வைக் கட்டியெழுப்புவோம்.

## "வாசக நெஞ்சம்"

"தொண்டன்" ஆகஸ்ட்–செப்டம்பர் இதழ் பிரமாதம்! நல்ல ஐடியா! இரண்டு இதழ்களைச் சேர்த்து ஒரு சிறப்பிதழ் தனிநாயகம் தமிழறிஞர் தனிநாயகம் அடிகளாருக்கு வெளியிட்டது மிகப் பொருத்தம்; பத்திரப் படுத்தி வைக்கவேண்டிய ஒரு சிறப்பு இதழ் இது.

1964ல் தனிநாயக அடிகளார் மலேசியாவில் சர்வதேச தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவி 4 தடவை சர்வதேச தமிழாராய்ச்சி மாநாட்டை நடாத்தியுள்ளார். இது ஒரு மகத்தான சாதனை. இதனை நிகழ்த்தியவர் ஓர் இலங்கையர், தமிழ் ஆர்வலர் என்பது நமக்குப் பெருமை தருவதாகும்.

இது தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டு. இந்த ஆண்டு முழுவதும் அவரது நினைவு நிகழ்ச்சிகள் இடம் பெற வேண்டும். ஏற்கெனவே தொண்டன் அதை ஆரம்பித்து வைத்துள்ளது. பாராட்டுகள்.....!

அருள்மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# செல்மின்சாரம்

செல்மின்சாரம் செல்போனைப்போல
மின்சார போஸ்ட் இல்லை வயரிங் இல்லை
வீட்டினுள் எந்த பல்பையும் ஏற்றலாம்
மின் விசிறியைப் போடலாம்
வாட்டர்பம்ப் மோட்டாரைப் போடலாம்
செல்மின்னின் பட்டனை அழுத்தினால் போதும்
மின்சாரத் திணைக்களம் இனி மூட்டை
கட்டவேண்டியதுதான்
செல்போனில் விமானத்துள்ளிருந்தும் பேசலாம்
அதுபோலவே செல்மின்னை, எங்கிருந்தும் இயக்கலாம்
தொலைபேசியும் மின்சாரமும்
பொதுமக்களின் வாழ்வோடு
பின்னிப் பிணைந்தவை
அரசாங்கம் பெரும் வருமானம் ஈட்ட உதவுபவை
இப்போது செல்போன் வந்து
ஒரு பகுதியை மீட்டது அதுபோலவே
செல்மின் வந்து மறுபகுதியை மீட்டது

என்ன நினைக்கிறீர்கள்....?
செல்மின் பற்றி நாம் எதுவும்
கேள்விப்படவில்லையே - உண்மைதான்
அப்படி ஒன்று வந்தால்
பொது மக்களுக்கு எவ்வளவு வசதி
என்ற கற்பனைதான் இது
யார் கண்டது, ஒரு காலத்தில்
இந்தக் கற்பனையும் நிஜமாகலாமல்லவா.....!

அருள்மணி




இலண்டனில் நடைபெற்ற

# உலகத் தமிழியல் மாநாடு

இலண்டன் உலகத் தமிழியல் ஆய்வு நடுவத்தினால் (WORLD RESEARCH CENTRE FOR TAMLOLOGY - LONDON) இலண்டனில் கடந்த ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி தொடக்கம் 18ம் திகதிவரை உலகத் தமிழியல் மகாநாடு நடத்தப்பட்டது. இலண்டன் **School of Oriental and African Studies, University of London** இல் நடைபெற்ற இம் மகாநாட்டில் கிழக்குப் பல்கலைக் கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி. றூபிவலன்ரீனா பிரான்சிஸ் அவர்கள் கலந்து கொண்டு "**தமிழ் மொழியின் முதல் அச்சுநூல் : தம்பிரான் வணக்கம் - ஒருநோக்கு**" என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

கத்தோலிக்க சமயத்தின் அடிப்படை உண்மைகளையும் தத்துவங்களையும் சுருக்கமாக அறிமுகம் செய்யும் **Doctrina Chiristam** என்னும் நூல் போர்த்துக்கேய மொழியில் மார்க்கோஸ் ஜோர்ஜ் அடிகளாரால் எழுதப்பட்டது. இதனை பீற்றர் மனுவேல் அடிகளும் ஹென்றிக் ஹென்றிக்குயிஸ் அடிகளும் இணைந்து தமிழில் மொழிபெயர்த்து '**தம்பிரான் வணக்கம்**' என இந்நூலுக்குப் பெயரிட்டனர். இந்திய மொழிகளிலேயே முதலில் அச்சிடப்பட்டதும் தமிழ் மொழியில் முதலாவதாக அச்சிடப்பட்டதும் இந் நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

தம்பிரான் என்பது இங்கு சர்வேஸ்வரன் அல்லது கடவுள் என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நூல் பற்றிய விபரங்களை முதலில் வெளிப்படுத்தியவர் வண. தனிநாயகம் அடிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

- றூபி வ. பிரான்சிஸ் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# “தமிழ்த்தூது”

சென்ற இதழ்த் தொடர்ச்சி

அருட்சகோ. *S.A.I.* மத்தியூ



தவத்திரு
தனிநாயகம் அடிகளாரின்
உலக நோக்கு :

“ஞானக் கழு நாயகம் அடிகளார் நிகரற்ற பேரறிஞர், உலகெலாம் ஒன்றே எனக் கண்ட பெருமகனார். வள்ளுவர் கூறும் சான்றாண்மை மிக்கவர்”

அடிகளாரைப் பற்றி கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி வெளியிட்டுள்ள ‘அணையா விளக்கு’ மலரில் பின்வருமாறு கூறப் பட்டள்ளது.

“அடிகளாரின் தமிழ்த் தாகம் அவருக்கு எப்போது ஊட்டப்பட்டது? தமிழுக்காகவும் தமிழ்ப் பேசும் மக்களுக்காகவும் அயராது உழைத்து வருகின்ற புனித வளனார் துறவற சபையினரின் ஊர்க் காவற்றுறை புனித அந்தோனியார் பாடசாலையிலே ஆரம்பக் கல்வியை அடிகளார் பெற்றபோது அந்தத் தாகம் அவருக்கு ஏற்பட்டது.

தனிநாயகம் அடிகளார் சங்க நூல்கள் வலியுறுத்திய ‘உலகெலாம் ஒன்றே’ என்ற கொள்கையை இறுகப் பிடித்தவர். அவரது சிந்தனை காலத்தைக் கடந்தது. சமகாலத் தவர் அவரைப் புரிந்துகொள்ளவில்லை. சமயப் பிதாக்கள் அவரைப் புரிந்துகொள்ள வில்லை.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்”, “பெரிதே உலகம் பேணுனர் பலரே” என்று சங்க நூல்கள் இயம்புகின்ற தத்துவத்தின் ஞானம் கைவரப் பெற்ற அடியார், ஐரோப்பா இத்தாலி, இங்கிலாந்து, வட தென் அமெரிக்காக்கள், இந்தியா, ஜப்பான், தென்கிழக்காசியா, மத்திய கிழக்கு நாடுகள், மத்திய வட ஆபிரிக்கா, சோவியத் ரஷ்யா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் பலவற்றிலும் வசித்து, அங்கேயுள்ள பல்கலைக்கழகங்களில் பாரம்பரியங்களைப் பெற்று, ஒப்பீடு செய்து, சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளைப் புரிந்து, கிழக்கு-மேற்குக் கலாசாரத் தொடர்புகளை அறிந்து, பண்பாடு கலாசாரங்களின் ஒப்பீட்டு ஆய்வுகளை நடாத்தி ஆங்கிலம், இத்தாலியம், இலத்தீன், பிரெஞ்சு, ஸ்பானியம், ஜேர்மனியம், ஹீப்று, கிரேக்கம், சமஸ்கிருதம், போர்த்துக்கீசம், ருஷ்ய மொழிகள், மலே, சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்று சிலவற்றிலே பாண்டித்தியம் பெற்றதோடு, தமிழ் மொழியிலே விசேட பாண்டித்தியம் பெற்று ‘உலகம் ஒன்றே’ என்ற உயர் நோக்கைக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சாதி சமயங்களைக் கடந்த சங்க நூல்களின், உலக ஒருமைப்பாட்டு நோக்கிற் கும், கிறிஸ்தவ கோட்பாடுகளிற்கும் தனிநாயகம் அடிகளார் எவ்வித வேறுபாட்டையும் கண்டிலர்.

தனிநாயகம் அடிகளார் 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ம் நாள் யாழ். பண்டத்தரிப்பு ஞானொடுக்க இல்லத்தில் இரவு 7 மணிக்கு மறைந்தார் என்ற செய்தி யைக் கேட்டபோது, தமிழ்பேசும் நல்லுலகின் அறிஞர் குழாம் அதிர்ச்சியுற்றது.

தமிழ்ப் பேரறிஞர் ஜேம்ஸ் *T.* ரட்ணம் அவர்கள், "சமகாலத் தமிழ்ப் பேரறிஞர்க ளுள் தனிநாயகம் அடிகளார் மிகப் பெரும் பேரறிஞர்" என வருணித்தார். ஏனெனில், தமிழ் மொழியைப் பற்றியும், தமிழ்க் கலாசா ரம் பற்றியும் உலகளாவிய பெருமையை ஏற்படுத்தியவர் தனிநாயகம் அடிகளார். 'தனிநாயகம் அடிகளாரின் மறைவு ஈடுசெய்ய முடியாதது ஆகும்' என்றார் பேராசிரியர் கைலாசபதி.

அ. அமிர்தலிங்கம் (பா.உ) அவர்கள் அடிகளாரின் பெருமையைக் குறிப்பிடும் பொழுது, "தமிழ்த்தாயின் பெருமையை தரணியறியச் செய்த தலைசிறந்த அறிஞரின் மறைவு தமிழுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு" என்றார்.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் தமிழை ஒரு சமயமாகக் கொண்டு, அச் சமயமே தம் உயிரெனக் கொண்டு, மகாகவி பாரதியாரின், "தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" எனும் கூற்றையும் சிரமேற்கொண்டு உலக கெங்கும் தமிழுரைத்தார். இதனை தமிழறி ஞர் ஒருவர் பின்வருமாறு கூறுவார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
"பெரிதே உலகம் பேணுனர் பலரே"

"யாதானும் நாடாமால் ஊராமா
லென்னொருவன்
சாந்துணையும் கல்லாதவாறு"

என்றெல்லாம் சங்ககால நூல்கள் யாண்டும் வலியுறுத்திய கொள்கைகளைப் பாரெங்கும் பரப்பியவர் தமிழ்த்தூதர் தவத்திரு தனிநாயகம் அடிகளாராவர்.

## தனிநாயகம் அடிகளார் வாழ்க்கைக் குறிப்பிலிருந்து.....


***M.A.M.Lit. (Annamalai) Ph.D (Lond) D.D. (Rome)***

| | | |
|---|---|---|
| **பிறப்பு** | : | கரம்பன், இலங்கை<br>Aug 02.1913 |
| **தந்தையார்** | : | நாகநாதர் கணபதிப்பிள்ளை<br>ஹென்றி ஸ்ரனிலோஸ் |
| **தாய்** | : | சிசில்இராசம்மா ஸ்ரனிஸ்லோஸ்<br>(கரம்பன், ஊர்காவற்றுறை) |
| **மரணம்** | : | 01.09.1980 இரவு 7.00 மணி |
| **இடம்** | : | ஞானசாலை, பண்டத்தரிப்பு |
| **அடக்கம்** | : | 03.09.1980<br>வண. ஆயர் கலாநிதி<br>B. தியோகுப்பிள்ளை அவர்களின்<br>கூட்டுத்திருப் பலியுடன் |
| **1963-1953** | : | **இலங்கை பல்கலைக்கழகத்தின் கல்விப்பீட விரிவுரையாளர்** |
| **1961-1969** | : | **மலேசிய பல்கலைக்கழகத்தின் இந்திய கற்கைத்துறைக்கான பேராசிரியர்** |
| **1970** | : | **வருகை விரிவுரையாளர்** (Paris)<br>**பரிஸ் பிரான்சியக் கல்லூரி** |
| **1971** | : | **இத்தாலிய நேப்பிள்ஸ் பல்கலைக் கழகத்தின் வருகைப் பேராசிரியர்** |

**- தொடரும் .....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## இந்தியாவில் இலத்தீன் திருச்சபையின் அமைப்பு முறையும் வழிபாட்டு முறையும்

இலத்தீன் திருச்சபையின் அமைப்பு முறை "பங்கு" என்று அழைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழுகின்ற கிறிஸ்தவக் குடும்பங்கள் இணைந்து ஒரு பங்கினை உருவாக்குகின்றார்கள். பங்கின் தலைவராகவும், ஆன்மீகத் தலைவராகவும் பங்குத் தந்தையே செயல்படுவார். பல பங்குகள் இணைந்து ஒரு மறைமாவட்டத்தை உருவாக்குகின்றன. இவற்றின் தலைவராய் ஆயர் செயற்படுவார்.

இலத்தீன் திருச்சபையில் 117 மறைமாவட்டங்கள் உள்ளன. இம்மறைமாவட்டங்கள் இணைந்து மாநில இந்தியநாட்டு மன்றத்தை உருவாக்கியுள்ளன. 1988ம் ஆண்டு தொடக்கம் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் வழிகாட்டலின் கீழ் இந்தியத் திருச்சபைக்கான கத்தோலிக்க ஆயர் மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் வழிபாட்டு முறையானது மேற்கத்தேய நாட்டு இலத்தீன் மரபு முறையைச் சார்ந்ததாகும். இவர்கள் வழிபாடுகளுக்கும், பக்தி மார்க்கங்களுக்கும், கொண்டாட்டங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பர். இவர்களின் வழிபாட்டிலே திருப்பலியானது முக்கியத்துவம் பெறுகிறது. இவர்களின் வழிபாட்டிலே புனிதர் வணக்கம் சிறப்பிடம் பெறுகிறது. சிறப்பான வழிபாட்டு மையங்கள், திருப்பயணங்கள் முக்கியம் பெறுகின்றன. அன்னை வேளாங்கண்ணித் திருத்தலம் மக்கள் அனைவரையும் கவரும் முக்கிய வணக்கஸ்தலமாய் விளங்குகிறது. இந்நூற்றாண்டில் இலத்தீன் திருச்சபையானது அதன் வழிபாட்டிலும், ஏனைய விடயங்களிலும் இந்தியப் பண்பாட்டு மயமாக்குவதில் கூடிய கவனம் செலுத்துகிறது.

இப்பணியானது, மதுரைப் பகுதியில் மறைப்பணி ஆற்றிய இத்தாலிய நாட்டு இயேசு சபைக் குரு றொபர்ட் தே நோபிலி அவர்களால் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் இன்று இப்பணியானது இந்திய இறையியலிலும் குருக்கள், துறவிகளின் வாழ்க்கை முறையிலும் அப்போஸ்தலிக்கப் பணியிலும் தாக்கம் செலுத்துகின்றது. திருச்சபையானது, இன்று இந்திய நாட்டின் கல்வியிலும், மருத்துவம், சுகாதாரம் போன்றவற்றிலும் பெரும் பங்காற்றி வருவதைக் காண முடிகிறது. இன்று, இந்தியாவிலே 14 மில்லியன் இலத்தீன் கத்தோலிக்கர்கள் இருக்கின்றார்கள். 22 உயர் மறைமாவட்டங்களும், 100 மறைமாவட்டங்களும் இருக்கின்றன. திருச்சபையில் 60% ஆன உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள்

- 19ம் பக்.....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




உயரம் குறைந்த விலாட் மாமரம். வீதிப்புறம் மின்கம்பிகள். கிழக்காக ரஞ்சிதத்தின் மதில் என்பதால் பல கிளை களை இழந்து வளர்ச்சியை வீட்டின் முற்றத்தை நோக்கி நீட்டிக் கிடந்தது. அணில் கள் தாவியோடின. மதிலின் மேலால் தவழ்ந்த காற்று இதமாக இருந்தது. கொளுத்தும் வெயில், பழைய சாய்மனக் கதிரையை இழுத்து மாமர நிழலில் போட்டுக்கொண்டு சாய்ந்தார் சடாட்சரன்.

“இந்த மாவட்டத்தில் ‘தயாட்ட கிருல்ல’ வந்தாலும் வந்தது. நாய்படாப்பாடு தான். இப்பதான் கொஞ்சம் ஓய்வு. பென்ச னுக்கு இன்னம் நாலு வரிசம் கிடக்குது”

மனம் அல்லாடியது. கால்களைத் தூக்கி பூசப்படாத மதிலில் வைத்துத் தேய்த்தார்........

“மகன், உடைச்ச பழைய பள்ளிக் கட்டிட மரந்தடிய விறகு விலையில வாங்கி, உளுத்த வீட்டக் கட்டி, உதவாத கல்லால மதிலயும் கட்டி பூசாமலும் போட்டுட்டு தங்கச்சிய என்ர தலையில கட்டிக் கை கழுவிப்போட்டு போயித்தான்....”

வாய்விட்டே திட்டினார். தொடக்கத் திலும் முடிவிலும் இரண்டு மோசமான வார்த்தைகள் விழுந்தன.

மதிலுக்கு அடுத்தபுறமாக, கோயில் முன்வீதி. மாமர நிழல் அங்காலும் நிறைந்தி ருந்தது. இஞ்சிப் பிளேன்ரி குடித்தால் நல்லது. ‘சீறிப் பாய்வாளே’ என்று நினைத் தார். காதில் விழுந்த குரல்கள் சிந்தனைக்கு ரிபன் வெட்டின.

• • • •

“கவிதாவுக்கு எண்பத்திநாலு. சாமினிக்கு அறுபது. கௌசல்யாவுக்கு ஒரு

பைந்தமிழ்க்குமரன் டேவிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முப்பதுதான்ரா போடலாம்''

என்றான் ஒருவன்.

"டேய் லூசாடா... அவள் என்ர காய் எண்டதால வேணுமெண்டு முப்பது மாக்ஸ் போடுறியா..... எல்லாத்தையும் சொல்லிப் போடுவன்''

இது மற்றவன் குரல்.

"எதடா சொல்லுவ....."

கோபத்துடன் கேட்டான்.

"நெற்கபேயில புளூ பாத்தது தொடக்கம் உண்டியல் உடைச்சது வரைக்கும் எல்லாத்தையும் ......"

அவன் முடிப்பதற்குள் இவனது கை அவனது கன்னத்தில் இறங்கியது.

"அடேய்...." என்று கத்தியபடியே பாய்ந்தான் மற்றவன். சத்தமிட்டபடியே சடாட்சரன் மதிலுக்கு மேலால் பார்த்தார். வேகமாக ஓடி மறைந்தனர். அவரிடமிருந்து பெருமூச்சு வெளிப்பட்டது.

**அ**யல்நாட்டில் ஐந்து வயதுச் சிறுமிக்கு நடந்த கொடுமை கட்டமிடப்பட்ட செய்தியாக படத்துடன் பத்திரிகையில் கிடந்தது. வாசித்தநேரம் முதல், மனம் தவித்துக் கிடந்தது. இதே வேகத்தில், செங்கலடியில் பதினாறு வருடங்கள் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த தாயையும் தந்தையையும் திட்டந்தீட்டிக் கொலை செய்ய உடனிருந்த மகளின் செய்தியும் விலா வாரியாகக் கிடந்தது. ஏனிந்த அவலம்! அசிங்கம்! மனிதன் மிருகநிலை நோக்கிச் செல்கிறானா....? கொதிநிலை கூடியது.


• • • •

"**நா**ன் புராணம் படிச்சி நிப்பாட்ட, மைக்க இழுத்து மிச்சப் புராணத்தை படிச்சது ஆரெண்டு தெரியுமோ...." இது விமலாவின் குரல்.

"ஓஹோ.... இண்டைக்கி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை. காலையில தொடங்கி கோயில்ல கிடந்து புராணம் படிச்ச கூட்டம் இதுகள்தான் போல''

"ஓமோம் உன்ர புருசன்ர தங்கச்சி தானே...!" இது வசந்தி.

"அவளேதான். அதுல அவள் படிச்ச பகுதியில, அடுத்தவளின்ர கணவனை மயக்கிக்கூடுவது பெரும்பாவமெண்டொரு வரி வந்ததே.... கேட்டியோ..... எனக்குச் சிரிப் பெண்டா அடக்க ஏலாமப் போச்சு.... இத இவள் படிக்கிறாளே! இந்த வரிகளை மனசுக்குள்ள வாசிக்கக்கூட இவளுக்குத் தகுதி இருக்குதா...? இதையேதான் யோசிச் சன்...." என்றாள் விமலா.



நமது நாவிலிருந்து பிறக்கும் சொற்கள் மீது கவனம் தேவை. ஏனெனில், மற்றவர்களைப் புகழ்ந்து, நல்லவற்றை விளைவிக்கும் சொற்களைவிட, அவர்களை இழிவுபடுத்தும் சொற்களே நமது நாவிலிருந்து வெளிவருகின்றன. நாவடக்கம் என்பது மிக எளிதானது, அதேவேளை மிகவும் சவால்கள் நிறைந்த ஒரு புண்ணியம்.

*- திருத்தந்தை -*

கையில பூசைத்தட்டு, சந்தனம், குங்குமம், விபூதி மணக்க அந்த மெய்யடியார்கள் நடந்துபோனார்கள். சடாட்சரனிடம் மீண்டும் பெருமூச்சு. பின்னாலும் சில பேச்சுக் குரல்கள். அவர்களுடைய உரையாடலில் பந்திவைக்கப்பட்ட, அலசப்பட்ட விடயம் நேற்றுப் பகல் நடந்தது.

• • • •

**மி**துனாவுக்கு வயது இருபத்து மூன்று. கணவன் பிரியநேசன் சவூதியில் பிளம்பர். மூணரை வயதில் பெண்குழந்தை. கணவனின் தம்பி ஏ.எல். கைநழுவிப் போக, கோயிலடி மரங்கள், கடற்கரை........

- தொடர் 14ம் பக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாகரையில் புதிய ஆலயம்



கடந்த செப்டம்பர் மாதம் 1ம் திகதி மட்டக்களப்பு வாகரைப் பங்கில் புதிய ஆலயம் திறந்து வைக்கப்பட்டு, ஆசிர்வதிக்கப்பட்டது. ஏற்கெனவே இங்கிருந்த புனித பேதுருவானவரின் ஆலயம் 2004ம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவில் சிக்கி அழிவுற்றதைத் தொடர்ந்து பல்லாண்டு முயற்சிகளுக்குப் பின் இப் புதிய ஆலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

வாகரைப் பிரதேசம், தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவந்த ஒரு பிரதேசமாகும். போர்த்துக்கேயர் கிழக்குப் பகுதிக்கு வருகைதந்த காலத்திலிருந்தே கிறிஸ்தவ மதம் இங்கு அறிமுகமாகி இருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. 1822ம் ஆண்டளவில் குடிசையிலான ஓர் ஆலயம் கட்டப்பட்டு புனித பேதுருவானவரின் சுரூபம் வைத்து வணங்கப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. இவ்வாலயம் பல்வேறு கால கட்டங்களிலும் திருத்தப்பட்டு விருத்திசெய்யப்பட்ட போதும் மக்களது வேண்டுகோளுங்கிணங்க, அப்போது வாகரைப் பங்கில் துணைக்குருவாக இருந்த அருட்தந்தை F.X. மேயர் அவர்கள் கற்கலாளான புதிய ஆலயம் ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டு எண் கோண வடிவிலான ஆலயம் ஒன்றை அமைத்தார். அது 1965ம் ஆண்டு ஜனவரி மாதம் 6ம் நாள் ஆசீர்வதிக்கப்பட்டு வழிபாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

30 ஆண்டுகாலமாக நாட்டில் இடம்பெற்ற இனப் போராட்டங்களின்போது, வாகரைப் பிரதேசம் முக்கியத் தளமாக விளங்கியதோடு பல்வேறு பாதிப்புகளுக்கும் உள்ளாகியது. இதன்காரணமாக, அங்கு வாழ்ந்த மக்கள் துன்பங்களுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் உள்ளாகினர். அதுபோதாதென்று 2004ம் ஆண்டு ஏற்பட்ட கடற்கோளினால் இவ்வாலயம் தரைமட்டமாக்கப்பட்டது. இதற்குப் பின்னரான காலங்களில் கத்தோலிக்க மக்கள் தமது வழிபாடு மற்றும் கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றுவதில் பல்வேறு இடர்களுக்கும் தடைகளுக்கும் முகங்கொடுத்து வந்தனர்.


2008ம் ஆண்டு வாகரைப் பங்குத்தந்தையான அருட்தந்தை லெஸ்லி ஜெயகாந்தன் அவர்களினால் புதிய ஆலயம் ஒன்றை அமைக்கும் முயற்சி தொடங்கப்பட்டது. ஆகஸ்ட் 31ம் நாள் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் புதிய ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். 2012ம் ஆண்டில், 'நஹி நஹிர நவோதய' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஜனாதிபதி அவர்களின் உதவியினாலும் பங்குத்தந்தை அருட்பணி லெஸ்லி ஜெயகாந்தன் அவர்களின் முயற்சியினாலும் ஆலயம் முழுவதுமாகக் கட்டி முடிக்கப்பட்டது. கடந்த செப்டம்பர் 1ம் திகதி ஜனாதிபதி அவர்களினால் திறந்துவைக்கப்பட்ட இவ்வாலயம், மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களால் ஆசிர்வதிக்கப்பட்டது. புதிய ஆலயம் திறக்கப்பட்டதோடு, வாகரைப்பங்கில் புதிய நிர்வாக முறைகளும் ஆயரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வாகரைப் பங்கு ஒன்பது வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு வட்டார ரீதியான பங்கிற்கான மக்களின் ஒத்துழைப்பும் செயற்பாடுகளும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. அதேவேளை, முன்னிருந்த வழக்கங்கள் நடைமுறைகள் திருச்சபையின் தற்கால முறைகளுக்கேற்ப மாற்றப்பட்டுள்ளன.

நாம் அறிந்தவரையில் இலங்கையில் கத்தோலிக்க ஆலயம் ஒன்றை ஜனாதிபதி திறந்து வைத்த நிகழ்வு இதுவாகத்தான் இருக்கும் என்று நம்புகிறோம். 30ஆண்டுகால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து அவற்றின் பின் விளைவுகள் உள்நாட்டிலும் உலகளவிலும் அலசப்பட்டு வரும் சூழ்நிலையில், தமிழ்ப் பிரதேசம் ஒன்றில் கத்தோலிக்க ஆலயம் ஒன்றை நாட்டின் ஜனாதிபதி திறந்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

- இன்பம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## மனிதன்

நிறத்தால் இனத்தால்
மதத்தால் குணத்தால்
சாகியத்தால்
நாட்டால் நகரால்
குலத்தால்
இவற்றில் எவற்றால்
வேறுபடினும்,
உருவத்தால்
மனிதன் மனிதனே!

கனா.மகேஸ்வரன்

## யோகி

புறக்காரணிகள் அனைத்தையும்
புறந்தள்ளி
புலன்களால் வரும்
உணர்வுகளைப் புறக்கணித்து
கொடுப்பதை உண்டு
இருப்பதைக் கொண்டு
இயல்பாய் இருப்பவன் எவனோ
அவனே யோகி!



## போகி

உலக சுகமனைத்தும்
தனதேயென அனுபவிக்க
முனைவான்......
பிறர்க்கெதுவும் ஈயாப்
'பெருங்'(!!) குணத்தான் ......
உண்ணாச் சொத்து
மண்ணாய்ப் போகுமென்பதும்
உணரான் ......
ஊர் வாயை உலை மூடிக்குள்
உறைய வைக்கும் சாணக்கியம்
கைவரப் பெற்றான் ......
'போகி' என்பது இவனுக்கே
பொருந்தி வருகிறது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# அழுத்தங்கள் நமக்கு அப்பாற்பட்டவையல்ல...!

● அ. அமலினி

தற்கால கணினி யுகத்திலுங்கூட செய்திகளை வாசிக்கும்பொழுதோ, தொலைக்காட்சிச் செய்திகள், தொடர் நாடகங்களைப் பார்க்கும்பொழுதோ அல்லது வேறு ஏதும் பொதுவான விடயங்களை, ஆனால் சிக்கலான விடயங்களைப் பலர் கூறும்பொழுதோ எமது மனம், எண்ண அலைகள் ஒருவகைப் பதட்டம் (Tension) அல்லது அழுத்தத்திற்கு (Stress) உள்ளாகின்றது. இவ்வகை அழுத்தங்களை எமக்குள்ளிருந்து அகற்ற, மருத்துவ முறைகள், யோகப் பயிற்சிகள் எனப் பல அணுகு முறைகளுக்குள் கடந்து சென்றாலும் அவைகூட பலவேளைகளில் பாதகமான விளைவுகளையே தருகின்றன. ஏனெனில் பலவேளைகளில் இவ்வகை சிகிச்சை முறைகளைப் பயிற்சியற்றவர்கள் வழங்கும்போது பணம் மட்டுமே குறிக்கோளாக அமைவதால் அவை பாதகமான விளைவுகளை வருவிக்கின்றன. ஆக, அழுத்தங்கள் என்பது உண்மையில் என்ன? அது எவ்வகையில் நம் ஆளுமையைப் பாதிக்கின்றது? என்கின்ற தெளிவு நமக்குள் இருக்குமாயின் எவ்வகைச் சிகிச்சைகளும் தேவையற்றது என்பதை நாம் உணர்ந்து விடலாம்.

பொதுவாக, மன அழுத்தம் என்பது தனிப்பட்ட ஒரு மனிதனின் மனப்பாங்கில், நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றதும் பலவேளைகளில் அம்மனிதனுக்கு அச்சுறுத்தலாகவும் அமைகின்ற சந்தர்ப்பங்கள் அல்லது நிகழ்வுகளைக் குறித்து நிற்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. இன்னொரு வகையிற் கூறின், நம் மனநிலையின் சமநிலைத் தன்மையைக் குழப்புகின்ற எந்தவொரு விடயமும் அழுத்தம் எனப் பொருள் கொள்ளலாம். அழுத்தங்கள் எப்பொழுதுமே ஏதோ ஒரு பதில் நடவடிக்கையை நம்மிடமிருந்து எதிர்பார்த்தே செயலாற்றும். இவ்வேளையில், அழுத்தங்களின் காரணமாக விரும்பத்தக்க சாதகமான பதில் நடவடிக்கைகளையும் நாம் வெளிப்படுத்துகின்றோம். உதாரணமாகக் குறிப்பிடின், முடிவுத்திகதி குறிப்பிட்டு வழங்கப்படும் இலவச, ஏல விற்பனைப் பொருட்கள் காரணமாக நாம் கொள்வனவு செய்யும்படி தூண்டப்படுகின்றோம். இருந்தும் "அழுத்தம்" என்பது எப்பொழுதுமே எதிர்மறை விளைவுகளைத் தருவனவாக நம் எல்லோர் உள்ளத்திலும் பதிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எந்தவொரு சிக்கலுக்கும் அதன் தீர்வைக் காணமுதல் அதற்கான காரணங்களைக் கண்டறிதல் மிக அவசியம். இல்லையெனில் பெறப்படும் விளைவுகள் மேலும் சிக்கலாக்கப்பட்டு சிலந்திவலை போல் நம்மைப் பின்னிக் கொள்ளும். அதேபோல் நம் அழுத்தங்களுக்கும் மூலகாரணங்கள் எவையெனக் கண்டறிந்தால் மட்டுமே சரியான தீர்வுகளை முன்வைக்க முடியும். நமக்கு மன அழுத்தங்கள் ஏற்பட பிரதான மூலங்களாக அமைபவை நமது இல்லமும் அதன் சூழலும், குடும்பச் சூழலும் அதன் கட்டமைப்பும். நம் தனிப்பட்ட நடத்தைகளும் பழக்கவழக்கங்களும், நாம் புரியும் தொழில்/கற்கும் கல்வி மற்றும் வெளியகக் காரணிகள்.

இல்லச் சூழல் எனும்போது வீட்டின் அமைப்பு, அது அமைக்கப்பட்டுள்ள சூழல் என்பன முக்கியம் பெறுகின்றன. மிகவும் நெருக்கப்பட்ட கட்டிட அமைப்புகளும், தொடர்மாடிக் குடியிருப்புகளும் மேலும் பெருந்தெருப் போக்குவரத்துப் பாதைகள் மற்றும் செறிவான கடைத்தெருக்கள் என்பனவற்றினருகே அமைக்கப்பட்டிருப்பதும் நம் மனநிலையின் சமநிலைத் தன்மையைக் குழப்பும் காரணிகள். அத்தோடு இல்லமானது, இயற்கையான சூழலில் அல்லாமல் எந்தவித தாவரங்களுமற்ற சூழலில் அமையப்பெறுவதும் அவற்றுள் அடங்கும்.

அதேவகையில், குடும்பச் சூழலும் அதிகளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. குடும்பங்களில் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட பொறுப்புகள் காரணமாகவும் தங்கிவாழ்வோர் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகளின்



அடிப்படையிலும் இவ்வழுத்தங்கள் தோற்றம் பெறுகின்றன. குடும்பத்தலைவன் என்கின்ற வகையில் நாளாந்தத் தேவைகளுக்கான வருமானத்தை ஈட்டுதல், பிள்ளைகளை நல்வழிப்படுத்தல், சொந்தமாகச் சொத்துகளை வைத்திருத்தல், எதிர்காலத்திற்கென சேமித்து வைத்தல் என நீண்டுகொண்டு செல்லும் பொறுப்புகள் பற்றிய அதீத யோசனைகள் அவர்களை அழுத்துகின்றன. அடுத்து, தாய் அல்லது வீட்டுத் தலைவி எனும் வகையில் உணவுத் தயாரிப்பு, ஒழுங்குபடுத்தற் கருமங்கள் மற்றும் பிள்ளைப் பராமரிப்பு என ஒரு வட்டத்திற்குள் அவர்களது அழுத்தங்கள் அமைகின்றன. பிள்ளைகள் எனும் நிலையில் கல்விச் செயற்பாட்டில் திட்டமிடப்படாத மேலதிக தேவையற்ற வகுப்புகள், முறையற்ற பொழுது போக்குகள் காரணமாகவும் சிறுவயதிலேயே அழுத்தங்கள் பாதிக்கின்றன. மேலும், அநேகமான சந்தர்ப்பங்களில் கற்றல் வேலைகளை ஒரு கட்டளையாகவும் வலுக் கட்டாயமான காரியமாகவும் மாணவர்கள் கருதுவதால் அதுவும் ''அழுத்தம்'' என தவறாக எண்பிக்கப்படுகின்றது.

காதணிகை வளையலல்ல தேவை

பாதியுடை பகட்டுமல்ல தேவை

ஓதிக்க எலும்புடைக்கும் அறிவையராய் மாறுங்கள்

சாதிக்க இன்னும்பல வுண்டு.




குறும்(புப்)பா - 118




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



தொடர்ந்து நோக்கின், தொழில் தொடர்பான காரணிகளும் அதிகளவு மன அழுத்தங்களைத் தோற்றுவிக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்வதாயின், திட்டமிடல், தீர்மானமெடுத்தல் முதலிய உயர் பதவி வகிப்பவர்கள் அதிகளவு அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. அதுமட்டுமன்றி, அதிகளவு சிக்கல் தன்மையுள்ள நிறுவன கட்டமைப்பிற்குள் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் முறையற்ற, குறித்துரைக்கப்படாத பல பொறுப்புகளை ஊழியர்கள் நிறைவேற்ற நிர்ப்பந்திக்கப்படுகையில் அவை அழுத்தங்களாகின்றன. மேலும், தகுதிக்கேற்ற வேலையின்மை, தொழிலுக்குரிய வேலையின்மை, திறனின்மை, தொழிற் கருவிகளின் பற்றாக்குறை, தொழில்தருனரின் அதிக கட்டுப்பாடுகள், சக ஊழியர்களது போட்டி மனப்பான்மை என்பனவும் மன நிலையின் சமநிலையை வெகுவாகப் பாதிக்கின்றன.

இவற்றைவிட, நம் ஒவ்வொருவரது நடத்தையும், மனப்பாங்கும்கூட அழுத்தங்கள் எம்மில் ஆதிக்கம் செலுத்தக் காரணமாகின்றன. எப்பொழுதும் சாதகமான, நேர்ப்படையான சிந்தனைப் போக்குள்ளவர்கள் (Positive Thinking) அழுத்தங்கள் என மற்றவர்கள் கருதுபவற்றை தமக்குரிய வாய்ப்புகளாகக் கருதிக் கொள்வர். ஆனால், எதிர்ப்படையான சிந்தனை உள்ளவர்கள் (Negative Thinking) அழுத்தங்களை விட நல்ல சந்தர்ப்பங்களையும் கூட அழுத்தங்கள் என்கிற தவறான கண்ணோட்டத்திலேயே கொண்டிருப்பர். மேலும், தனிப்பட்ட வகையில் நம்மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை, சமூக ஒத்துணர்வு, பங்களிப்பும் ஒத்துழைப்பும் என பலவகை நற்குணங்களின் குறைபாடுகளும் பல அழுத்தங்களுக்கு இடம் கொடுக்கின்றன......



- தொடரும் ....

## நெஞ்சு வலிக்குது ......

...பஸ்தரிப்பிடம் என்று அலைந்தான். நேற்றுப் பகல் பிள்ளைக்காக காட்டுன் சனல் போட்டு கையில் ரிப்பி ரிப்பியைக் கொடுத்துவிட்டு இருவரும்....... சற்றுநேரத்தில் பிள்ளை முன் ஒழுங்கைக்குள் ஓடிவந்து, "வாங்க அன்ரி, சித்தப்பாவும் அம்மாவும் ............... வந்து பாருங்க" என்றாள்.

ஓடிவந்தவள் நேசனின் அக்கா. கையும் களவும்; விளைவு பிள்ளையின் வாயில் நெருப்புக்கொள்ளிச் சூடு!

நினைவுகள் சடாட்சரனை அலைக் கழித்தன. இடதுபக்க நெஞ்சினுள் சுள்ளென்று வலி பரவியது. ஏற்கனவே, இரண்டு தடவைகளைத் தாண்டியிருந்தவர், மெல்ல கைகளை ஊன்றி எழுந்தார். நாக்குக்குக் கீழே வைக்கும் மாத்திரை எங்க கிடக்குதோ தெரியாது. நெஞ்சுவலி பரவியது. மாமரக்கிளையை பிடித்தபடியே, "இஞ்சே ..... சுகி.... எனக்கு நெஞ்சு வலிக்குதப்பா...." என்றார். முன் ஹோலில் தொலைக்காட்சியில் 'குருவி' யில் யாவரும் மூழ்கியிருந்தனர். திரும்பவும், "எ....எ.... எனக்கு நெஞ்சு வ......லிக்கு.....தப்...பா....." என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கடுகுக்கதை 52

- பற்றி -




அந்தத் தொலைபேசி அழைப்பை எடுத்தபின் அன்ரன் மிகவும் குழம்பிவிட்டார்.

"என்ன மனிசர்களடா இவர்கள்....?"

என்று மனதிற்குள் சலித்துக்கொண்டார்.

அன்ரனுக்குத் தெரிந்த குடும்பம் ஒன்று உள்ளது. அவர்களுக்கு அன்ரன் நிறையவே உதவிசெய்துள்ளார். அவரின் ஒரு நகைகூட இன்னும் அவர்களிடமே உள்ளது.

அண்மையில், அன்ரனின் தகப்பனார் காலஞ்சென்றபோது, அக்குடும்பம் ஓடிவந்து அவரிடம் ஐயாயிரம் ரூபாவைக் கொடுத்தது. அன்ரனிடம் தேவையான பணம் இருந்தமையால் மறுத்துவிட்டார்.

"ஐயா, நீங்கள் எங்களுக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறீங்க..... இத கட்டாயம் பிடிக்கணும்....."

அவர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு அவர்களின் அன்பளிப்பைப் பெற்றுக்கொண்டார். ஆறு மாதங்கள் கடந்து, இன்று காலை தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அந்தக் குடும்பத் தலைவர்தான் பேசினார்.....,

"ஐயா, அப்பா செத்தப்ப நாங்க தந்த காச நீங்க இன்னும் திருப்பித் தரல்ல...யே....!"

"எந்தக் காசு...."

"அந்த ஐயாயிரம் கடன்தான்....."

"ஓ...! அது கடனா.... இப்பவே வாங்க தாறன்..."

'என்ன புதினமான ஆக்களடா....' என்று எண்ணிய அன்ரன் தான் கொடுத்த நகையை கேட்கப்போவதில்லை என்று முடிவெடுத்தார். ■




2016ம் ஆண்டு மே மாதம் 23 முதல் 29 வரை பிலிப்பீன்சின் செபுவில் அடுத்த அனைத்துலக திருநற்கருணை மாநாடு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. 'கிறிஸ்து உன்னில் இருக்கிறார்: அவர் மகிமையின் நம்பிக்கை' என்ற தலைப்பில் 2016ம் ஆண்டில் 51வது அனைத்துல திருநற்கருணை மாநாடு நடைபெறும் என்று அவ்வுயர்மறை மாவட்டம் அறிவித்துள்ளது. அனைத்துலக திருநற்கருணை மாநாடு ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகின் ஏதாவது ஒரு நாட்டில் நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டனின் சில நிமிடங்கள்....!



இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக', நாம் சந்திப்பது, அருட்பணி. இக்னேஸ் ஜோசப் அடிகளார் அவர்களை. இவ்வாண்டு அவர் தன் குருத்துவத்தின் வெள்ளிவிழா ஆண்டைக் கொண்டாடினார். தொண்டனுக்காக நேரத்தை ஒதுக்கித் தருமாறு கேட்டபோது ஒத்துழைப்பு வழங்கினார்.

1954ம் ஆண்டு யூன் மாதம் 28ம் நாள் பிறந்த அடிகளாரின் தந்தையாரின் பெயர் திரு. அருளன் இன்னாசி, பாசமிகு தாயாரின் பெயர் செபமாலை. குடும்பத்தின் தலைச்சன் பிள்ளையாகிய இவருக்கு இரண்டு தங்கைகளும், ஐந்து தம்பிகளும் இருந்தனர்.

தனது ஆரம்பக் கல்வியை சொறிக்கல்முனை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் (தற்போது திருச்சிலுவைப் பாடசாலை) பெற்றுக்கொண்டார். 6ம் வகுப்புவரை அங்கு கற்ற ஜோசப் அடிகளார், பின் தன் இடைநிலைக் கல்வியை அதாவது 7ம் வகுப்பு தொடக்கம் 10ம் வகுப்புவரை கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரியில் நிறைவுசெய்து கொண்டார். பின்னர், தனிப்பட்ட பரீட்சார்த்தியாக க.பொ.த (உ.த) வர்த்தகப் பிரிவில் சிறப்புச் சித்திகளைப் பெற்றுக்கொண்டார்.



**எவ்வாறு குருவாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டீர்கள்?** என்று நாம் அவரிடம் கேட்டபோது....., ஆர்வமாகப் பதிலளித்தார். அடிகளாரின் சித்தியொருவர் செபமாலைத்தாசர் சபையில் அருட்சகோதரியாக இருந்தார்; அவரின் பெயர் அருட்சகோதரி. மேரி பேர்டில்லா. அவர்தான் இவருள் குருவாக வரவேண்டும் என்ற ஆர்வத் தீயை மூட்டியவர். அத்துடன் மூத்தபிள்ளையை இறைவனுக்கு அர்ப்பணிக்கவேண்டுமென்ற பெற்றோரின் ஆர்வம் என்றெல்லாம் இணைந்து இவரைக் குருமடத்தில் இணைத்தது.

**க.பொ.த (சா.த) பரீட்சைக்கும், குருத்துவப் படிப்பை ஆரம்பிப்பதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் என்ன செய்தீர்கள்....?** என்று நாம் கேட்டபோது, அவர் சொன்ன பதில் எம்மை அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் உறையவைத்தது.

வெளிப்படையாகச் சொன்னார்: "பாதை அமைக்கும் பணியில் உதவியாளராகப் பணியாற்றினேன். கல் சுமந்து வீதியில் இட்டேன்". பின்னர் தந்தை அவர்கள் சிலகாலம் கல்முனையில் உள்ள அச்சகமொன்றில் பணியாற்றியுள்ளார். தொடர்ந்து நீர்ப்பாசன இலாகாவில் வேலை பார்த்துள்ளார்.

**குருத்துவக் கல்வி தொடர்பாக நாம் அவரிடம் வினவினோம்.**
1978.01.07 அன்று திருமலை - உப்புவெளி சிறிய குருமடத்தில் இணைந்து கொண்ட அடிகளார் பின்னர் 1981ல் இந்தியாவின் திருச்சிராப்பள்ளி தூய பவுல் குருமடத்தில் இணைந்துகொண்டார். 3 வருடங்கள் மெய்யியலையும், 4 வருடங்கள் இறையியலையும் கற்றுத் தேர்ந்தார். விடுமுறைக் காலங்களில் இலங்கை வராது மறைக்கல்வி டிப்ளோமாவையும் குடும்ப ஆன்மீகம், இளைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உருவாக்கம் என்பனவற்றில் விசேட பயிற்சிகளை யும் பெற்றுக்கொண்டார்.

இதற்கிடையில் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து தமிழகம் வந்தவர்களின் துயர் துடைப்புப் பணிகளிலும் இவர் அதீத ஈடுபாடு காட்டியுள்ளார். அவர்களின் கல்வி, சுகாதார வசதிகள் தொடர்பாகவும் மணவள ஒற்றுமைப்படுத் தலிலும் கரிசனை கொண்டு செயற்பட்டார்.

**அவரின் குருத்துவ வாழ்வு குருத்துவப் பணித்தளங்கள் பற்றி நாம் வினவினோம்....**

1988ம் ஆண்டு யூலை மாதம் 28ம் நாள் சொறிக்கல்முனையில் குருப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அப்போது, காலஞ்சென்ற B.A. ஜோசப் அடிகளார் பங்குத் தந்தையாக இருந்தார். பின்னர் 1988 தொடக்கம் 1991 ஏப்ரில் வரை மட்டக்களப்பு மரியாள் இணைப் பேராலயத்தில் உதவிப் பங்குத் தந்தையாகவும், 1991 தொடக்கம் 1995 வரை கல்லாறு அருளானந்தர் ஆலயத்தில் பங்குத் தந்தையாக வும் பணிபுரிந்துள்ளார். 1995ம் ஆண்டு தொடக்கம் 1999ம் ஆண்டு வரை கல்முனை இருதயநாதர் ஆலயப் பங்குத் தந்தையாகப் பணியாற்றியுள்ளதாகக் குறிப்பிட்ட அடிகளார் அவர்கள், அக்கால கட்டத்தில் கல்முனை மறைக்கோட்ட முதல்வரா கவும், குடும்பவாழ்வுப்பணி இணை இயக்குனரா கவும், வின்சன்-டி-பவுல் சபையின் ஆன்மீக இயக்குனராகவும் மரியாயின்சேனை கியூரியாவின் ஆன்மீக இயக்குனராகவும் சிறப்புப் பணிகள் ஆற்றி யுள்ளார். இதற்கிடையில், கல்முனை பணித்தள வாழ்க்கையின்போது 'அருளின் ஆண்டு' என்ற சஞ்சிகை வெளியீட்டையும் இருதய ஆண்டவர் ஆலய நூற்றாண்டு விழாவையும் சிறப்பாகச் செயற் படுத்தியுள்ளார்.



பின்னர் 1999ம் ஆண்டு தொடக்கம் 2006 பெப்ரவரி வரை மட்டக்களப்பு மரியாள் இணைப் பேராலயத்தில் பங்குத் தந்தையாகப் பணியாற்றி யுள்ளார். அக்காலகட்டத்தில் மட்டக்களப்பு மறைக்கோட்ட முதல்வராகவும், குடும்ப வாழ்வுப் பணியக இயக்குனராகவும் சேவையாற்றினார்.

2006ம் ஆண்டு தொடக்கம் 2012ம் ஆண்டு வரை தாண்டவன்வெளி வியாகுல அன்னை ஆலயப் பங்குக் குருவாகவும் மரியாயின் சேனை கொமித்சியத்தின் ஆன்மீக இயக்குனராகவும் அரும்பணியாற்றிய பின்னர் 2012 பெப்ரவரி தொடக்கம் சகாயபுரம் சகாய அன்னை ஆலயப் பணித்தளக் குருவாகவும் பணியாற்றி வருகின்றார்.

செபவாழ்வு என்பது, ஒவ்வொருவரின் வாழ்விலும் முக்கியமான அம்சம் என வலியுறுத்தும் அருட்பணி இக்னேஸ் ஜோசப் அடிகளார் அவர்கள் தனது பணி வாழ்வில் வன்செயல் பாதிப்புகளில் பல தடவைகள் மயிரிழையில் உயிர்தப்பியுள்ள சந்தர்ப்பங்கள் பற்றியும் குறிப்பிட்டார்கள்.

மறைக்கல்விக்காகப் பிள்ளைகளை ஆயத்தம் செய் ததும், குடும்ப வாழ்வுப் பணியில் பல குடும்பங்களை இணைத்து வைத்ததும் தனக்கு மனநிறைவான பணியாக இருந்தது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

> **"எந்நிலையில் இருந்தாலும் பொறுமை, தாழ்ச்சி, இறை நம்பிக்கையுடன் தன்னம்பிக்கையும் இருந்தால் இறைவன் துணை செய்வார். சோர்வும் தயக்கமும் அறவே வேண்டாம்."**

**தொண்டன் வாசகர்கட்கு நீங்கள் என்ன செய்தி சொல்ல விரும்புகின்றீர்கள் என்று கேட்டபோது,**

எந்நிலையில் இருந்தாலும் பொறுமை, தாழ்ச்சி, இறை நம்பிக்கையுடன் தன்னம்பிக் கையும் இருந்தால் இறைவன் துணை செய்வார். சோர்வும் தயக்கமும் அறவே வேண்டாம்.

செவ்வியின்போது கடும்மழை பொழியத் தொடங்கி யது. முடிவில் எமக்கு நன்றி சொல்லி தனது மழை யங்கியையும் தந்து வழியனுப்பினார்.

நாமும் குருத்துவ வாழ்வின் வெள்ளிவிழா வாழ்த்து களுடன் நன்றியும் கூறி விடைபெற்றுக் கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# துன்பமுறும் தமிழ் மக்களுக்கு 'விடிவெள்ளி' விக்னேஸ்வரன்!



தமிழ் மக்கள் மிகப்பெரும் இன்னல்களை அனுப வித்து வரும் நிலையில் அவர்களது விடிவிற்காகப் பாடுபடக்கூடிய உத்தமர் ஒருவர் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட் டுள்ளார். இதனை ஆண்டவனின் தெரிவாகக் கொண்டு அவர் பின்னால் அனைவரும் அணி திரண்டு தமிழ் மக்களின் விடுதலை நோக்கிய மற்றொரு பயணத்தை ஆரம்பிக்க ஆண்டவர் எப்போதும் அருள்புரிவாரென மன்னார் ஆயர் மேதகு இரா.யோசேப்பு ஆண்டகை தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் பிரதம நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்: நீதியரசரது தெரிவானது தமிழினத் தலைவர்கள், புத்தி ஜீவிகள், ஊடகவியலாளர்களின் சிந்தனை வல்லமையைக் காண்பிப்பதுடன் காலத்தை நுணுக்கமாக நோக்கி முடிவெடுக்கும் திறனை அவர்கள் கொண்டிருப்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

இன்றைய நிலையில் எவர் தேவையோ அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்கு நான் முதற்கண் எனது பாராட்டையும் வாழ்த்தையும் அவருக்கும் அனைவருக்கும் தெரிவித்துக்கொள் கிறேன். இவ்வாறான ஒருவர் தெரிவுசெய்யப்படவேண்டுமென்ற எதிர்பார்ப்பு, மக்களிடையேயும் இருந்தது. அதற்கேற்ப, அவரது தெரிவும் அமைந்துள்ளது.



நீதியான, நேர்மையான, இறைபக்தி மிகுந்த இலஞ்சம், ஊழல் போன்றவற்றை தனது வாழ்க்கையில் முழுமையாகத் தோற்கடித்த இவரது தெரிவு, கடவுளின் தெரிவென்றுதான் சொல்ல வேண்டும். இன்றைய நிலையில் இவரது தெரிவை எல்லாம் வல்ல ஆண்டவ னும் விரும்பியுள்ளார். உள்நாட்டிலும் சர்வதேசமெங்கிலும் வாழும் தமிழ் மக்களின் பிரதிநிதியாக நீதியரசர் செயற்பட அனைவரும் உதவ வேண்டும். அவருடன் சேர்ந்து தமிழ் மக்களின் துன்ப, துயரங்களைப் போக்கும் விதத்தில் சிறந்த வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான தனது தூரநோக்கை அவர் உடனடியாகவே வெளிப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யுத்தத்தாலும் இடம்பெயர்வுகளாலும் பெரும் இழப்புகளைச் சந்தித்து நிற்கும் தமிழ் மக்களை இவற்றின் தாக்கத்திலிருந்து தூக்கிவிடும் பெரும் பொறுப்பை நீதியரசர் ஏற்றுள்ளார்.

தமிழ் மக்கள் தற்போது மிகப் பெரும் சவால்களையும் நெருக்குதல்களையும் வடக்கு-கிழக்கில் எதிர்கொண்டுள்ளனர். தாங்கள் வாழும் மண்ணில் இந்தச் சவால்களிலிருந்து அவர்கள் மீள வேண்டும். இந்தத் தேர்தலை அதற்கொரு வாய்ப்பாக அனைவரும் பயன்படுத்த வேண்டுமென்பதுடன் தமிழ் மக்கள் தமது உணர்வுகளுக்கு அப்பால் சலுகைகளுக்கு என்றுமே விலைபோகாதவர்கள் என்பதை இத்தேர்தலில் நிரூபிக்க வேண்டும்.

பொருத்தமானதொரு தருணத்தில் நீதியரசரின் தேர்வு தமிழ் மக்களுக்கு வழிகாட்டியாக அமையுமெனக் கருதுகிறேன். அனைத்து மக்களும் அனைத்து மதத்தினரும் சமூக அமைப்புகளும் கல்விமான்களும் தங்களது பொறுப்பை உணர்ந்து இவரது வெற்றிக்குப் பாடுபட வேண்டும்.

நாம் அடிமைகளோ அல்லது 2ம் தர பிரஜைகளோ அல்ல. நாம் ஒதுக்கப்பட்டவர்களாக வாழ வேண்டியவர்கள் அல்ல என்பதை நீதியரசரின் தேர்வின் மூலம் முழு உலகிற்கும் உணர்த்துவது வடபகுதி மக்களின் கடமையாகும். இவரது வெற்றிக்கு எல்லாம் வல்ல ஆண்டவர் துணை புரிவாரெனவும் ஆயர் தெரிவித்துள்ளார்.

- நன்றி -
'மன்னா'
(ஆகஸ்ட் 2013)

**- மாணவர் பக்கம் .....**

... பலவேளைகளில் உயர்குடி மக்களின் அடக்கு முறைக்கு உள்ளாகின்றனர். இன்று இவர்களின் பிரச்சினையினை தீர்ப்பதில் திருச்சபை முன் நிற்கிறது. இவ்வாறு இலத்தீன் திருச்சபையானது வழிபாட்டு முறைகளிலும் அமைப்பு முறையிலும் வளர்ச்சி அடைந்து வந்துள்ளதைக் காணமுடிகிறது. ❐




குடையால் மூடி மறைத்திட்டால்
குமுறும் எரிமலை அமிழ்ந்திடுமா!
சுடலைக் காட்டில் குயில்கூவின்
சுகந்தரு நந்த வனமாமோ!
குடலைப் பிடுங்கிப் புசித்தோர்கை
கும்பிடப் புனிதம் பெற்றிடுமோ!
இடரை விதைத்து இனவேரை
இழுத்தவர்க் கறமே கூற்றாகும்.

கழுதை கற்று இசைத்தாலும்
காதுக் கினிதோ அதன்கீதம்?
உழுது வயலில் விதைத்தாலும்
உதவாக் களைகள் நெல்லாமோ!
தொழுது வாழ்வில் உயர்வுதனைத்
தொடினும் மானம் அவர்க்குண்டோ?
அழுது துயரில் அமிழ்ந்தாலும்
அடிமை இருளறின் சுகமன்றோ!

பசியால் கதறித் துடித்தழுங்கால்
பருகத் தண்ணீர் தரமறுத்தோர்
இசைவாய் அன்னம் படைத்துயிரை
இழந்தபின் ஊட்டின் எதுலாபம்?
விசை கொண்டெழுக மானிடமே
வெற்றி வந்துன் கைப்படுமே
அசையா திருப்பின் ஏதுபயன்
அசைத்தால் அசையும் இமயமுந்தான்.....!

- நிலா தமிழின்தாசன் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




புதுமைப்பித்தன் கதைகள்
பதிப்பு அண்மையில் கையில்
பதிப்பு: காலச்சுவடு பதிப்பக
இரா. வேங்கடாசலபதி அவர்
புதுமைப்பித்தன் படைப்
யாக்கியுள்ள செய்தியையும் இப்
தொகை தரவேண்டிய நிலையில்லா
மையும் குறைத்துள்ளதாக
அதில் 'கண்ணன் குழல்'
வாசித்துப் பாருங்கள். அக்
எழுத்தா ....? 05.09.1934 'காந்தி'
கதை.

முழுத்தொகுப்பின் திருத்திய மூன்றாம்
கிடைத்தது. இது 2002ம் ஆண்டுப்
வெளியீடு. பதிப்பாசிரியராக ஆ.
கள் செயற்பட்டுள்ளார்.
புகளை தமிழக அரசு நாட்டுடமை
பதிப்பில் பார்க்கின்றோம். 'ரோயல்டி'
ததால் அதற்கேற்ப நூலின் விலை
அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.
என்னும் சிறுகதை: தருகிறோம்
காலத்திலேயே இப்படியொரு
என்னும் பத்திரிகையில் வெளிவந்த

---

**ஞா**யிற்றுக்கிழமை காலை சென்னை எழுந்துவிட்டது. அந்தப் பரபரப்பு, வேகம், அவசரம், ஆவேசம், போட்டி – அவைகளும் எழுந்துவிட்டன.

அதில் நானும் ஒருவன்தான்: நூற்றில் இன்னொன்று, அந்த நாகரீகக் கதியின் வேகம் என்னையும் இழுத்துக்கொண்டுதான் போகிறது.

காலை,

ட்ராமின் படபடப்பு, மோட்டாரின் ஓலம், பந்தயக் குறிப்புடன் பத்திரிகையின் விளம்பரக் கூப்பாடு. அங்கே,

எத்தனை பேர் ஓடுகின்றார்கள்? என்ன அவசரம்!

அங்கே ஒரு பரத்தை. அவள் பிச்சைக்காரி: இது என்ன ஏமாற்றமோ? நொண்டி, பிச்சைக்காரன். நல்ல வியாபாரம்.

நொண்டிக்கால் இல்லாவிட்டால் மனித உணர்ச்சியில் பேரம் செய்யமுடியுமா...?

அதைவிட, இந்தக் குமாஸ்தா எதில் உயர்ந்தவன்? அவன் அங்கமெல்லாம் ஒடிக்கப்பட்ட முடவன். அதற்குமேல் அவனுக்கும் இருக்கும் சுமை. அதிலே அவனுக்குக் கிடைக்கும் 30 ரூபாய். தானம் தான். இந்தச் செல்வத்தில் தனது சட்டை ஓட்டையை மறைத்துக் கொள்ளவேண்டிய கௌரவம்.

அதைச் சமூகம் எதிர்பார்க்கின்றது.........

ஒரு பூட்ஸ்கால்: 'போ வெளியே' என்று உதை கொடுக்கின்றது.

'படார்....'

கதவு சாத்தியாகிவிட்டது.

இவனும் உருண்டான். குழலும் விழுந்து கீறியது.

மறுபடியும் மோட்டாரின் ஓலம்.

"என்ன சாகவேண்டும் என்ற ஆசையா...?"

என்ற கூப்பாடு. நானும் விலகினேன்.

உயிரை விட எனக்கும் ஆசையில்லை.

• • •

இக்கதையின் ஆரம்பப் பகுதியும், முடிவுப் பகுதியும் தரப்பட்டுள்ளது. மொத்தம் 45 வரிகள் கொண்ட கதை. முழுக்கதையையும் தருவது பதிப்புரிமையென்று இருந்ததால், அதற்கு அது அழகல்ல. நூலில் 155ம் பக்கம், 'கண்ணன் குழல்' வாசிக்கலாம்.

1934ம் ஆண்டு இவ்வாறான எழுத்து நடை எம்மைப் பிரமிக்க வைக்கின்றது! புதுக்கவிதை போல் உள்ளது. கெட்டித்தனமும், துணிச்சலும் வேண்டும்.

- ஆழியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த்தாகம்" ■ எமது முயற்சிகளுக்கு ■ முன்னுதாரணமாகத் திகழ வேண்டும்! ■ தொடக்க விழாவில் தமிழ்நேசன்



தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த்தாகம், தமிழ்வேகம் எமது முயற்சிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழவேண்டும். தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, தமிழ்க் கலைகள், தமிழ் இலக்கியம் சார்ந்த அவருடைய கனவுகள் மெய்ப்பட உழைக்க வேண்டும். இதுவே இப்பெருமகனாருக்கு நாம் செய்யும் நிறைவான நன்றியாக, அஞ்சலியாக இருக்க முடியும் என மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் குறிப்பிட்டார். மன்னார் தமிழ்ச்சங்கத்தினால் மன்னாரில் மூன்று நாட்கள் (ஓகஸ்ட் 2 – 4ஆம் திகதிகள் வரை) இடம்பெற்ற தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவின் தொடக்க விழாவில் தலைமை உரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, கடந்த 2010ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் மன்னார் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த 'மன்னார் தமிழ்ச் செம்மொழி விழா' மன்னாருடைய கலை இலக்கிய வரலாற்றில் தடம் பதித்த ஓர் அற்புத நிகழ்வு. தேசிய ரீதியிலும், சர்வதேசிய ரீதியிலும் பேசப்பட்ட ஓர் இனிய நிகழ்வு. அதைப்போன்றதொரு பெருவிழா வைத்தான் இம்முறையும் நாம் முன்னெடுத்தோம். இவ்விழாவுக்கு மன்னார் மக்கள் அனைவரது ஒத்துழைப்பும் எமக்குக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.



மன்னார் தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட இந்த மூன்று நாள் விழா, எட்டு அரங்குகளைக் கொண்டிருந்தது. தொடக்க விழா நிறைவு விழா ஆகியவற்றோடு இரண்டு ஆய்வரங்குகள், இரண்டு இலக்கிய அரங்குகள், இரண்டு கலை அரங்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என இவ்விழா அமைக்கப்பட்டிருந்தது. பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள், அடிகளாரின் சிலை திறப்பு, வீதிக்கு அடிகளாரின் பெயரிடல், 'தமிழாழி' என்ற நூற்றாண்டுவிழா மலர் வெளியீடு என இந்த விழா பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கியிருந்தது.

அத்துடன் இந்த விழாவின்போது தமிழ் மொழிக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் பணியாற்றிய சில சான்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். 60றக்கும் மேற்பட்ட விருந்தினர்கள் இந்த விழாவில் பங்கேற்றனர். 20றக்கும் மேற்பட்ட வெளிமாவட்ட தமிழ் அறிஞர்கள் இதில் பங்கேற்றனர். 100றக்கும் மேற்பட்ட கலை நிகழ்வுகள், 500றக்கும் அதிகமான கலைஞர்கள் இவ்விழாவில் பங்கேற்றனர்.

எமது விழாவில் ஆய்வரங்குகள் முக்கியமானவை, தனித்துவமானவை.

### பொதுநிலை ஒலிப்பு வேண்டும்

*தமிழ் ஒலிகள் ஊர் ஊராக, உரையாடுதலில் வேறுபடுவது குறிக்கற்பாலது. மலையாள நாட்டின் எல்லையிலிருப்போர் மலையாளம் பேசுவதுபோல் தமிழைப் பேசுவர். சிங்கள நாட்டில் இருப்போர் சிங்களத்தைப் போல் தமிழை உரைப்பர். இவ்வாறே மலாயாவில் சீன மொழியைப் போலும் அமெரிக்கத் தீவில் ஆங்கிலத்தைப் போலும் தமிழை உரைத்து வருகின்றனர். எனினும், இத்தமிழ் ஒலி வேறுபாடுகளை நீக்கி, மேல்நாட்டு மொழிகளுக்கு உள்ளதைப் போன்ற பொதுநிலை ஒலிப்பு ஒன்றை பரப்புவது தமிழ்ப் பாதுகாப்பிற்குப் பெரும் நலத்தினைப் பயக்கும். நம் வெள்ளித்திரை நடிகரும், வானொலி உரையாளரும் இப்பொதுநிலை ஒலிப்பைக் கடைப்பிடிப்பாரெனின் இவ்வொலிப்பு எங்கும் எளிதில் பரவிவிடும். ஆங்கிலத்திற்கு B.B.C. இன் ஒலிப்புப் பொதுவிதியாயிருத்தல் போல் தமிழிற்கும் யாதாயினுமொரு பொதுநிலை ஒலிப்பு வேண்டும்.*

-தனிநாயகம் அடிகள் -

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தந்தையும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு வித்திட்டவருமான தனிநாயகம் அடிகளார் 'தமிழ்ப் பண்பாடு' என்ற ஆங்கில முத்திங்கள் ஏட்டை நிறுவி தமிழின் பெருமையை வெளிநாட்டு அறிஞர்களும் உணரும்வகை செய்தார். தன்னுடைய வெளிநாட்டுப் பயணங்கள் மூலம் தமிழின் தொன்மையை, மேன்மையை, சிறப்பை வெளிநாட்டவரும் அறிந்துணரச் செய்தார். இதனால் 'தமிழ்த்தூது' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றார்.

தனிநாயகம் அடிகளாருடைய பணிகளை, முயற்சிகளை இன்றைய இளம் தலைமுறையினருக்கு வெளிச்சம் போட்டுக் காட்டி அவர்கள் மொழிப்பற்றும், இனப்பற்றும் உள்ளவர்களாக வளர ஊக்குவிக்கவேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயத்தேவையாகும்.

தனிநாயகம் அடிகளாரைப் பற்றி மட்டுமே இங்கு ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றன. நூற்றாண்டு விழாவையொட்டி நாம் ஏற்பாடு செய்திருந்த ஆய்வரங்கு, அடிகளாரைப் பற்றிய, அவருடைய பணிகளைப் பற்றிய சில தெளிவுகளை, உண்மைகளை வெளிக்கொணர்ந்திருக்கும் என நம்புகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



'புதிய உலகம் நிகழ்ச்சி பற்றிய ஒரு மனப்பதிவு'

# இறையியலின் புதுப் புனலாய் இதயங்கள் நிறைக்கும் திருக்கனலாய்......

முறையூர் சந்திரசேகரன் சசீதரன்

கல்லறைப் பூக்களாய்
இந்நாளில்
காற்றலைக் கருவிகள் மாறி,
காதுகளைக் கபளீகரம் செய்யும்.....

மார்க்கோனி கூட
மனத்தலத்தில் கற்பனை
புரிந்திருக்க மாட்டான்!
தன் உழைப்பின் உன்னதம்
இவ்வண்ணம்
உபத்திரவம் செய்யுமென்று!

சமூகத்தின் எரியும் பிரச்சினைபால்
சற்றேனும் தவறுதலாய்
மனிசர் அக்கறைப்படாதிருக்கும்படி,
சந்தைப் பொருளாதார மந்தைகளுக்குச்
சாமரம் வீசும் வானலைகள்!

மனித அந்தரங்கத்தை(த்)
திறந்த வெளியாக்கி, உணர்வுகளிற்கு(த்)
தீந்தை பூசும் திரிபுகளும், உறைவுகளும்...!

இவ்விதம் வல்லூறுகள், உலக
முதலாளியத்திற்கு ஆலவட்டம் பிடிக்கும்
ஆரோக்கியமற்ற சமகாலத்தில்,
சப்தமில்லாமல், இறை
சந்நிதானத்து சுந்தரப் புனிதப்
பூந்துணராய்
அலர்ந்து மணம் பரப்பும்
புதிய உலகம்!

வெள்ளிவிழா தாண்டியும்
உள்ளம் கொள்ளை கொண்டு
கள்ளம் அகற்றி, கர்த்தரின்
தெய்வீகப் பாதையிலே செவிகளையும்
பின் இருதயங்களையும்
திருப்பிவிடும் புதிய உலகம்!

ஒலியுலா வரும்
ஒவ்வொரு ஞாயிறும்
இலங்கை வானொலி
வானலை, இறைமண்டபத்துச்
சலங்கை பூட்டி
தெய்வீகத் தேனலை இறைக்கும்...!

சுய தேடலுக்குச் சூக்குமப்படுத்தும்
சிந்தனைப் பொறிகள்,
பூகோளமயமாதலின்
புழுதியுள் புதைந்த மனங்களை
மறை வழியில் ஊக்கப்படுத்தும்!


வாழ்வியலின் வார்ப்படமாய்
சித்திரங்கள்..... சிறுகதைகள்....
குறுநாடகக் கோலக் கீற்றுகள்....!

உயர்மறையும், உலக வாழ்வு நெறியும்
தேர்ந்து தெளிவிக்கும்
கனிவான கலந்துரையாடல்கள்!

போட்டி வாழ்விலும்
மேட்டிமைச் சேட்டையிலும்,
போலிச் சூழலிலும்
சிக்கித் தவிப்போருக்குச்
சிந்தனை மாமருந்து!

உலகத் திருச்சபையோடு
அற்புதமாய் எமை இணைக்கும்
செய்திவட்டம்!

குறுகிய பேத வரம்புகள் உடைத்து
பெருகிப் பிரவகிக்கும்
இந்த இறையியல் 'வான்நதியின்'
தேன் சாரல் சுவைப்பதற்கும்
தடை விதிக்கும்
தறிகெட்ட புதிய ஊடகக் கவர்ச்சி!



ஆயினும் என்ன
ஆயிரம்
ஆட்டுமந்தைகளை விட
ஒரு சில சிங்கங்களின்
பிரசன்னம் பீடு தருவது,
என்றபடி
"புதிய உலகத்துக்கென்றே"
உயிர்த்துடிப்பான
நேயர்குழாம் நெருக்கமாயும்,
நேசமாயும் உண்டு!

குறியிசை தொடங்கி
குரலிசை வரையில்
வண்ணமாய் நிகழ்ச்சி
படைக்கும்
மலர்வேந்தன் பணி
மனங்கொளத் தக்கதே!

இணைய உலகிலும்,
இறைவாழ்வில்
எமை இணைக்கும்
'புதிய உலகம்'
இன்னும் புதுமைகொள
வாத்சல்ய வாழ்த்துகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மதங்கள் காலப்போக்கில் மறைந்து போகுமா....?



இன்று நாம் வாழும் உலகம் அசுர பின் நவீனத்துவத்தின் வளர்ச்சியில் பல மைல் கற்களைத் தாண்டிச் சென்றுகொண்டிருக்கின்றது. பொருளாதார வளர்ச்சியும், அறிவுப் பெருக்கமும் இறைவனைப் பின்னகர்த்துமளவிற்கு வாழ்க்கை முறைகளை மாற்றிக்கொண்டிருக்கின்றன. மதம் ஒரு சடங்கு ரீதியான அமைப்புக்குள் வரையறுக்கப்பட்டுள்ள நிலையை இன்றைய அவசர உலகத்தில் காண்கின்றோம். நுகர்வுக் கலாசாரத்தின் தாக்கமும் அறிவின் வளர்ச்சியும் மதங்களோ அல்லது கடவுளோ இல்லாமல் வாழ முடியும் என்ற ஒருவிதமான நம்பிக்கை விதைகளை மனித உள்ளங்களில் விதைத்துச் செல்கின்றது. இத்தகைய மனநிலை, உலகிலே வர்க்க பேதங்களையும், சுயநலத்தையும் அதீதமான முறையிலே பார்ப்பதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்கப்போகின்றது. இதனால், இன்று ஆலயங்களுக்குச் செல்வோரின் தொகை அருகிப் போய்க்கொண்டிருக்கின்றது. மதத்தை அல்லது கடவுளை தேவைக்குப் பயன்படுத்தும் நிலையில் இன்றைய மனிதனின் வாழ்க்கை முறை மாறிவிட்டது.




## மதங்களின் இன்றைய நிலை

மதங்கள் பெரும்பாலும் இன்று அமைப்புகளைப் பாதுகாப்பதிலும், மத அடையாளங்களை விளம்பரப்படுத்துவதிலுந்தான் முனைப்புக் கொண்டுள்ளன. இதனால், மதங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து வருகின்றன என்பதில் இரு கருத்து இருக்கமுடியாது. குறிப்பாக, இன்றைய மதத் தலைவர்களின் செயற்பாடுகள் மதவாதத்தையும், மக்களிடையே பிளவுகளையும் ஏற்படுத்தும் நோக்கில் செயற்படுவதால் மதங்களின் நோக்கங்கள் கொச்சைப்படுத்தப்பட்டு ஓர் அமைப்பு ரீதியான மதத்திற்கு வெளியே ஆன்மீகத்தைத் தேடும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். மத அடையாளங்கள் எங்கள் ஆக்கிரமிப்பின் குறியீடாகப் பயன்படுத்தப்படும் நிலையும், மக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்துவதாகவும் அமைகின்றபோது, பொதுவாக மதங்கள் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறிஸ்தவம் தாக்குப் பிடிக்குமா....?



இன்றைய மதங்களின் நிலைப்பாடுகளை நோக்குமிடத்து, கிறிஸ்தவமும் இதற்கு விதிவிலக்கல்ல. கிறிஸ்தவமும் தனது நம்பகத்தன்மையை இழந்து வருகின்றது (Credibility) என்பதை இன்றைய காலகட்டத்தில் இடம்பெறும் சம்பவங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம். இன்று, ஆலயங்களுக்குச் செல்வோரின் எண்ணிக்கை குறைந்து செல்கின்றது. அவசர உலகத்தில் வாழும் சூழலால் கிறிஸ்தவர்களின் மதிப்பீடுகளும் மாறி, வாழ்க்கை முறை உலகத்தைச் சார்ந்ததாகவே அமைந்து விடுகின்றது. இதற்குத் திருச்சபைத் தலைமைகளின் வாழ்க்கை முறைகள், அருட்பணியாளர்களின் செயற்பாடுகள் பெரும்பாலும் உலக மதிப்பீடுகளினால் வழி நடத்தப்படுவதாக அமைகின்ற போது, நம்பகத்தன்மை இழக்கப்படுகின்றது. இறைமக்களை இறையனுபவத்தை நோக்கி வழிநடத்த வேண்டியவர்களே, உலகப் போக்குகளாலும், நுகர்வுக் கலாசாரத்தின் தாக்கத்தினாலும் வழிநடத்தப்படுவது கிறிஸ்தவத்தின் சாட்சிய வாழ்வை

> **"கடவுள் இல்லாமல் உலகத்தில் பொருளும், செல்வமும் தேடி வாழலாம். இதன் மூலம் ஒரு போலியான மகிழ்ச்சியை, இன்பத்தை அடைந்து வாழலாம் என்பதே இன்றைய மனிதனின் நிலைப்பாடாக இருக்கின்றது. இத்தகைய போக்குத் தொடருமானால், காலப்போக்கில் மதங்கள் வெறும் குறியீடுகளாக மட்டும் அடையாளப்படுத்தப்படும்."**

கேள்விக்குறியாக்கி விடுகின்றது. இன்று, திருச்சபையின் அமைப்புகளில் திருத்தந்தையின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப புதுப்பித்தலும், எளிமையும் தேவைப்படுகின்றது. இதற்குத் துறவறத் தலைமைகளின் வாழ்வும் துறவற சபையைச் சார்ந்த துறவறக் குருக்களின் வாழ்வும் இன்று சாட்சிய வாழ்வாக மக்களுக்குத் தெரிவதில்லை. அடிப்படையில் கிறிஸ்தவத்தின் அமைப்புகளிலும், இறைமக்களின் மேய்ப்புப்பணி சார்ந்த பார்வையிலும், தனிப்பட்ட வாழ்விலும் உண்மையான மனமாற்றம் ஏற்படாதவரை கிறிஸ்தவம் தாக்குப்பிடிக்க முடியாது. இன்று வணிக விழாவாகக் கொண்டாடப்படும் திருவிழாக்கள், கிறிஸ்தவர்களின் சாதாரண விசுவாசத்தை மூலதனமாக வைத்து சுரண்டும் திருத்தலங்கள், நேர்த்திகளிலும் சாம்பிராணிகளிலும் ஆன்மீகத்தைத் தேடும் வியாபார மத உணர்வுகள் (Commercialized) எல்லாம் கிறிஸ்தவத்தை கிறிஸ்துவின் பார்வையிலிருந்து

இருப்பை இழந்துவிடும் அபாயகரமான நிலை தோன்றியுள்ளது. இன்று பொதுவாக மதங்களை அடையாளப்படுத்துவது பிரமாண்டமான கோவில்களும், ஆலயங்களுந்தான். மதத்தை சடங்கு ரீதியான (Cultic) அமைப்பிற்குள் முடக்கி வாழும் செயற்பாடுகளாலும், மதங்கள் நேர்த்திகள், அர்ச்சனைகள், வழிபாடுகள் போன்றவற்றோடு மேலோட்டமான ஒரு பக்தியுணர்விற்குத் தீனி போடுவதாகவே அமைகின்றது. இன்று, மதவாதிகளின் பகிரங்கமான மதக்கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள் மதங்கள் மட்டிலும், அதனைச் சார்ந்த அமைப்புகள் மட்டிலும் நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்துள்ளது. இதனால் ஒரு தனிப்பட்ட பக்திமயப்பட்ட ஆன்மீகத் திற்கே (Personal Spirituality) வழி வகுத்துள்ளது எனலாம். இத்தகைய ஒரு பின்புலத்தில் சடங்குகளை மையப்படுத்திய மதம் மட்டும் ஓரளவு நிலைத்து நிற்கக்கூடிய நிலை ஏற்படும். ஓர் உண்மையான மத உணர்வுகளை, நோக்கங்களைக் கொண்ட மதங்கள் மறைந்து போகக்கூடிய நிலை ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


அருள் முனைவர் ஸ்ரன் அன்ரன் அ.ம.தி

தூரத்தே இருக்கும் நிலைக்கே தள்ளிவிடுகின்றது. இயேசு மக்களை அடிமைப்படுத்தும் மத உணர்வுகளையும், சட்டங்களையும், திருத்தலங்களை வியாபார ஸ்தலங்களாக மாற்றும் நிலைக்கும் எதிராகத் தன் போதனைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை இங்கு நோக்குவது அவசியமாகும். இனி, மக்கள் தாங்களாகவே தங்களுக்கென்று ஒரு தனித்துவமான ஆன்மீகத்தை, மதத்தைத் தாண்டி மதத் தலைவர்களைக் கடந்து வாழும் நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும்.

## கிறிஸ்தவம் அடிப்படையில் ஒரு மதமல்ல!

கிறிஸ்தவம் ஒரு மதத்திற்குரிய இயல்புகளைக் கொண்டிருந்தாலும், இயேசு கிறிஸ்தவம் என்னும் மதத்தை நிலைநாட்ட உலகத்திற்கு வரவில்லை என்பதே உண்மையாகும். ஓர் இறையனுபவத்தில் ஊன்றிய ஒரு வாழ்க்கையையே முன்மொழிந்தார். ஆனால், அது இன்று மறக்கப்பட்டு கிறிஸ்தவம் என்னும் மதத்தையும், அமைப்புகளையும் பேணும் செயற்பாடுகள் முன்நிறுத்தப்படுகின்றன. கிறிஸ்தவர்களும் தெளிவான முறையில் இயேசுவின் இறையரசைப்பற்றிய பார்வையை இன்றும் புரிந்துகொள்ளாமல் வாழ்வது கவலைக்குரியதே! இதுவே உண்மையாகும். தெய்வபயம் என்ற அடித்தளத்திலேயே இன்று மதம் வாழப்படுவது மதத்தின் இலக்கை கேள்விக்குறியாக்கிவிட்டது. கடவுள் இல்லாமல் உலகத்தில் பொருளும், செல்வமும் தேடி வாழலாம்; இதன் மூலம் ஒரு போலியான மகிழ்ச்சியை, இன்பத்தை அடைந்து வாழலாம் என்பதே இன்றைய மனிதனின் நிலைப்பாடாக இருக்கின்றது. இத்தகைய போக்குத் தொடருமானால் காலப்போக்கில் மதங்கள் வெறும் குறியீடுகளாக மட்டும் அடையாளப்படுத்தப்படும். இதனால் மதங்கள், குறிப்பாக கிறிஸ்தவமும் சில மத அடையாளங்களோடும், சடங்குகளோடும் வரையறுக்கப்பட்ட, மக்களின் வாழ்க்கையைப் பாதிக்காத அமைப்பாக மாறிவிடும். இன்றைய திருச்சபைத் தலைமைகள் தீர்க்கதரிசனமான பார்வையோடு, இன்றைய சூழமைவுகளைப் புரிந்துகொண்டு காலத்தின் சவால்களுக்கேற்ப அமைப்புகளை மாற்றியமைக்க வேண்டும். அடிப்படையில் திருச்சபையின் எல்லாத் தளங்களிலும் உண்மையான மனமாற்றம் தேவைப்படுகின்றது. அத்துடன் புதுப்பித்தலும், மீளாய்வும் அவசரமான தேவையாகவுள்ளது. ஆலயங்கள் வெறிச்சோடிப்போகும் நிலையும், ஆன்மீகம் அடிமட்டத்திற்குச் செல்லும் நிலையும் ஏற்படும். மதத்தைப் பற்றியோ, கடவுளைப் பற்றியோ சிந்தனையே இல்லாமல் வாழமுடியும் என்ற தவறான வாழ்க்கை முறைக்கான பாதை திறந்துவிடப்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும். கிறிஸ்தவமும் சாதியம், வர்க்கம் போன்ற பிளவுகளால் இன்றும் ஒன்றிப்பில்லாத சமூகமாக வாழ்வதும் மதத்தைப் பற்றிய நம்பகத்தன்மையை மலினப்படுத்தியுள்ளது என்று கூறலாம். கிறிஸ்தவத்தில் இன்று ஒரு களையெடுப்புத் தேவைப்படுகின்றது. திருச்சபைத் தலைமைகள் செயற்படுமா அல்லது இயற்கையான மரணத்திற்குத் தள்ளிவிடுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தொடரும் ....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

பரிசுப் போட்டி

முடிவுத் திகதி 31.10.2013

# விவிலியம் கற்போம் – 124

## இணைச்சட்டம் அதிகாரங்கள் 34

(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

மோசே மோவாபுச் சமவெளியிலிருந்து எரிக்கோவுக்குக் கிழக்கே நெபோ மலையிலுள்ள பிஸ்காவின் உச்சிக்கு ஏறிச்சென்றார். ஆண்டவர் அவருக்குத் தாண் வரையிலுள்ள ........................ நாடு முழுவதையும் காட்டினார். மேலும், நப்தலி முழுவதையும் எப்ராயிம் நிலப்பகுதியையும், மனாசே நிலப்பகுதியையும், யூதாவின் நிலப்பகுதி முழுவதையும், மேற்கே மத்தியதரைக் கடல் வரையிலும் காட்டினார்; மற்றும் நெகேபையும் ........................ மாநகராகிய எரிகோ முதல் சோவார் வரையிலுமுள்ள நிலப்பரப்பையும் காட்டினார். அப்போது, ஆண்டவர் மோசேயிடம் "நான் உன் வழி மரபினருக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்கு ஆணையிட்டுக் கூறிய நிலம் இதுவே. உன் ........................ நீ அதைப் பார்க்கும்படி செய்து விட்டேன். ஆனால், நீ அங்கு போகமாட்டாய்" என்றார். ஆண்டவர் கூறியபடி மோசே மோவாபு நாட்டில் இறந்தார். மோவாபு நாட்டில் பெத்பகோருக்கு எதிரேயுள்ள பள்ளத்தாக்கில் அவரை ........................ செய்தார் ஆண்டவர். இன்றுவரை எந்த மனிதருக்கும் அவரது கல்லறை இருக்குமிடம் தெரியாது. மோசே இறக்கும்போது வயது நூற்றிருபது. அவரது கண்கள் மங்கினது மில்லை; அவரது வலிமை குறைந்ததுமில்லை. ........................ சமவெளியில் இஸ்ரயேல் மக்கள் மோசேக்காக முப்பது நாட்கள் துக்கம் கொண்டாடினர். மோசேக்காக இஸ்ரயேல் மக்கள் அழுது துக்கம் கொண்டாடின நாட்கள் நிறைவுற்றன. ........................ . மகனாகிய யோசுவாவின் மேல் மோசே தம் கைகளை வைத்ததால், அவர் ஞானத்தின் ஆவியால் நிரப்பப்பெற்றிருந்தார். இஸ்ரயேல் மக்கள் ........................ செவிகொடுத்து, மோசேக்கு ஆண்டவர் கட்டளையிட்டபடி நடந்தார்கள். ஆண்டவர் நேருக்குநேர் சந்தித்த மோசேயைப் போல், ........................ வேறெவரும் இஸ்ரயேலில் இதுகாறும் எழுந்ததில்லை. ஏனெனில், எகிப்து நாட்டில், பார்வோனுக்கும், அவன் அலுவலர்க்கும், அவன் நாடு முழுவதற்கும் ........................ அருஞ்செயல்களையும் செய்யும்படி ஆண்டவர் மோசேயை அனுப்பினார். இஸ்ரயேலர் அனைவரின் கண்கள் காணுமாறு அவர் ஆற்றிய அனைத்து ........................ செயல்களும் அச்சுறுத்தும் மாபெரும் செயல்களுமே இதற்குச் சான்றாகும்.

**விடைகள்:** **மோவாபு, யோசுவாவுக்கு, ஆற்றல்மிகு, அடையாளங்களையும், கிலயாது, கண்களால், இறைவாக்கினர், நூனின், பேரிச்சை, அடக்கம்.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 124

**பரிசுப் போட்டி**




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. ஓர் ஒளியாண்டு என்பது கிலோமீற்றரில்
*(10 இலட்சம் - 15 இலட்சம் - 20 இலட்சம்)*

2. மனித உடலில் உள்ள மொத்த எலும்புகள்
*(200 - 206 - 210)*

3. இலங்கையின் முதல் மனிதர்கள் வரிசையில் முதலில் வருபவர்
*(வில்லியம் கோபலாவ - ஜே.ஆர். ஜெயவர்த்தன - டி.எஸ். சேனநாயக்கா)*

4. பாக்குநீரிணையை முதன் முதல் நீந்திக் கடந்தவர்
*(நவரத்தினசாமி - ரியான் லோசேட் - றிச்சேட்)*

5. பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான 'நெடுநல்வாடை' என்னும் நூலை யாத்தவர்,
*(கபிலர் - நக்கீரர் - மாங்குடி மருதனார்)*

6. தவத்திரு தனிநாயகம் அடிகள் பிறந்த இடம்
*(நெடுந்தீவு - நெல்லியடி - கரம்பன்)*

பெயர் : ..........................................................................................

முகவரி: ..........................................................................................

..........................................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 124**
**தொண்டன்**
**அ. பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 122 விடைகள்

பிள்ளைகளும், அன்பு, இதயத்தில், எமோரியரின், கைவிடவும், மோசே, இஸ்ரயேலர், சந்திப்பு, சினம், லேவியரிடம்

## அறிவை வளர்ப்போம் - 122 விடைகள்

**1.** மே 08 **2.** அலெக்சான்டர் **3.** லியனார்டோ டாவின்சி

**4.** பிலிப்பைன்ஸ் **5.** அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான் **6.** இங்குத் தங்கினான்

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை அளித்து 300/= பரிசு பெறுபவர்

- **A.** லிசாந்தன் ஒலிவர்
  169/1, லூர்த்து அன்னை வீதி,
  (பார் வீதி), மட்டக்களப்பு.

ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்

- க. அபிநயா,
  8ம் குறுக்கு,
  திராய்மடு, மட்டக்களப்பு.
- சுரேந்திரன் யூதாசினி,
  யூதா நகர்,
  தேற்றாத்தீவு - 01.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 74 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
  எஸ். இரதிப்பிரியா,
  65, திருச்செந்தூர் கோவில் வீதி,
  கல்லடி, மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  டெலன் செலர்,
  353, பிரதான வீதி,
  வாழைச்சேனை.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  பா. ஆன் ஹரிசனா,
  78/8, பற்றிமாகிரி வீதி,
  தாண்டவன்வெளி,
  மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org